SWATHANTRA SANGU Regd. No. M. 2011

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

சாமியார் மந்திரம்
—கதை.

அட- (சங்கீத) பாவமே

தீமையை எதிர்க்காதே
—ராஜாஜீ.

அரட்டைச் சுப்பன்

'பூலோக சொர்க்கம்'

உஷையின் கனவு
—கு. ப ரா.

குளத்தங்கரைக் குயில்கள்
—பாலபாரதி.

சொன்னுல் விரோதம்

புத்தகம் 4. வைகாசி மீ 19உ (1-6-34) வெள்ளி இதழ் 27.

பேனா பிடித்தவர்களே—!

கலைஞர்களெல்லாம் பேனா பிடித்தவர்கள்; ஆனால் பேனா பிடித்தவர்களெல்லாம் கலைஞர்களல்ல.

'வாளைக் காட்டிலும் பேனாவின் சக்தி பெரிது' என்று யாரோ ஒருவர் கூறியிருப்பதாக ஞாபகம். பிரஞ்சு ஞானியாகிய வால்டேர் 'அரசனிடம் வலிமை மிகுந்த செங்கோல் உண்டு, என்னிடமோ அதைக் காட்டிலும் சக்தி வாய்ந்த பேனாக்கோல் உளது' என்று அடிக்கடி சொல்லுவானாம். 'கையில் வாளும் 'பாக்கட்'டில் ஹோமரும் கொண்டு நான் உலகத்தை ஜயிக்கப் போகிறேன்' என்று நெப்போலியன் இருபெரும் சக்திகளையும் ஒன்றாகப் பிணைத்துவிட விரும்பினான்.

வாள் ஜட சக்தியின் அறிகுறி, பேனாவோ உயிர்ச் சக்தியின் உண்மை வீறு. வாள் பெரும்பாலும் பெரிய பெரிய நாகரிகங்களை உடைத்துத் தள்ள மட்டுமே பயன்படும்; பேனா ஒன்றுதான் பழைய நாகரிகத்தை உடைப்பதென்றாலும் சரி, புது நாகரிகத்தை சிருஷ்டிப்பதாயினும் சரி, எதுவானாலும் செய்ய வல்லது. பல்லவர்களின் ஆட்சியின்கீழ் பதுங்கிக் கிடந்த தமிழர்களை ஒரேயொரு நூற்றாண்டுக்குள் கம்பனது ராமாயணம் தட்டியெழுப்பித் தலை நிமிரச் செய்துவிட்டது. அமெரிக்காவின் அடிமை வர்த்தகத்தை ஒழிப்பதற்கு 'அங்கிள் டாம்ஸ் கேபின்' என்னும் ஒரு நாவல்தான் விதை போட்டது. ஜெர்மானிய தத்துவ சாஸ்திரி நெய்ட்ஷியின் நெருப்பு வார்த்தைகளே சென்ற மகா யுத்தத்திற்கு அடிகோலியது என்று கூறலாம். நமது வேதமும், பைபிளும், குரானும், பகவத் கீதையும், நால்வர் பாடல்களும், பன்னிருவர் பிரபந்தமும் காலம் ஏற ஏறப் புத்தழகும், புத்தொளியும் பெற்று விளங்குகின்றன. காலம் என்ற 'தாஜா' பண்ண முடியாத 'கிரிடிக்'கிடம் அகப்பட்டு அழிந்து போகாத நூல்கள் சிலவே யாகும். நாம் மேற்காட்டியவை இவ்வினத்தைச் சேர்ந்தவையே.

தற்காலத்திலே இத்தகைய உயர்ந்த இலக்கியங்கள் செய்தவர்கள் மிகமிகச் சிலரே. கோபாலகிருஷ்ண பாரதியின் நந்தனார் சரித்திரம், வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார், பி. ஆர். ராஜம் அய்யரின் கமலாம்பாள், ஏ. மாதவய்யரின் பத்மாவதி, ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயம், எல்லாவற்றிற்கும் மேல் சிரோபூஷணமாக நமது பாரதியின் நூல்கள். இவைகளைத் தவிரத் தமிழில் இனிமேல்தான் இத்தகைய இலக்கியங்கள் உண்டாகவேண்டியிருக்கிறது. பேனா பிடித்தவர்களே—நீங்கள் காலம் கடக்க முடியாத கலைஞர்களாக ஆகாவிடினும், அத்தகைய கலைகளை வருவிக்கத்தக்க வகையிலாவது எழுதக்கூடாதா?

இன்று தமிழ்நாட்டிலே ஒரு தப்பெண்ணம் பரவி வருகிறது. இலக்கியமென்பது ஏதோ கிள்ளுக்கீரை என்று எண்ணி எவர் வேண்டுமானாலும், எதை வேண்டுமென்றாலும் எழுதத் துவக்கிவிடுகிறார்கள். அவைகளின் மலிவாலும், சுலபத்தாலும் மக்களிடம் அதற்குச் செலாவணியும் கிடைத்துவிடுகிறது. உண்மையான கலைஞர்கள் இருக்குமிடம் தெரியாது பதுங்கிக் கிடக்கின்றனர். இந்த நிலை மாறினாலொழியத் தமிழ்நாட்டுக்கு விமோசனம் கிடையாது.

சரஸ்வதியின் கோயில் மஹா பரிசுத்தமானது, அதன் கர்ப்பக்கிரகத்தை எவரும் எளிதில் அடைந்துவிட முடியாது. திருப்பதிக் கோயிலில் அர்ச்சகனுக்குத் தட்சணை வைத்துவிட்டால் ஒருவன் எவ்வளவு பாவியாயிருந்தாலும் எப்படி வெங்கடாஜலபதியைப் பார்த்துவிட முடிகிறதோ அவ்வளவு சுலபமாய்க் காசு கொடுத்துக் கலைமகளைக் காண இயலாது. உண்மையாகக் கலைமகளைத் தரிசிக்க விரும்புவோன் தெளிந்த அறிவும், மாசு மறுவற்ற உள்ளமும் உடையவனாய் மாறிவிடவேண்டும். வெறும் பேனாமட்டும் பேசினால் போதாது, ஒருவனுடைய உள்ளம், உயிர் யாவும் பேனா முனையில் வந்து கூத்தாடினால், அப்பொழுது அவ்வார்த்தைகளுக்கு உள்ள வீரியத்தை யாதொன்றாலும் அசைக்க முடியாது; 'இயற்கையே பேனாப் பிடித்து அவனுக்காக எழுதுகிறது' என்று வேர்ட்ஸ்வொர்த்தைப்பற்றி மெத்யூ ஆர்னால்டு சொல்வதுபோல், கலைமகளே உன்னுடைய கருத்து மூலம் பேனாவில் சான்னித்யமாவாள். "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்பது இதைத்தான்.

வாழ்க்கையின் பலவிதமான ரகங்களும் கலைஞனுக்குத் தலைகீழ்ப் பாடமாய்த் தெரியவேண்டும். அப்போதுதான் அவனுக்கு வாழ்க்கையின் பூரணத்வம் விளங்கும். ஆனால் அந்த ரகங்களைக் கற்பனை செய்து கலையோ, கவிதையோ சிருஷ்டிக்கவேண்டும். இவ்வாறு செய்தால்தான் தமிழ்மொழி வளம் பெறும்.

வெறுமே எதாவது எழுதித் தொலைக்கவேண்டுமே என்று எழுதுவதில் பயனில்லை. உண்மையான இலக்கியம் உள்ளத்தின் அடியிலிருந்து, அறிவின் போர்வையோடு வெளிக்கொட்ட வேண்டும். திருவருட்பாவில் சிறிது மாற்றிக் கீழ்க்கண்ட பாடலை எழுதினேனேல் அதுதான் உண்மை ஆசிரியன்—இங்கு பத்திரிகாசிரியனல்ல, புத்தக ஆசிரியனைப்பற்றித்தான் பேச்சு—லக்ஷணம்.

'நானெழுதுங் காலென்னை நானறி
யேன், கையொன்றோ

ஊனெழுதும் உளமெழுதும்
உயிரெழுதும் உயிர்க்குயிரும்

தானெழுதும் அனுபவங்காண்.'

இவ்வனுபவம் உடையவர்களே உண்மைக் கலைஞர்கள்.

—காளிதாஸன்.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088 | ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] வைகாசி௴ 19௳ வெள்ளிக்கிழமை (1—6—1934) [No. 27

யாரை நிறுத்தலாம்?

"சட்டசபை நுழைவால் சுயராஜ்யம் இம்மிகூட நகர்ந்துவரப் போவதில்லை" என்றுதான் மகாத்மா காந்தி இன்றும் அபிப்பிராயப்படுகிறார். வேலையில்லாதவர்களுக்கு ஏதாவது வேலை வேண்டாமா? அதற்காகத்தான் சட்டசபை நுழைவு என்று, பெரும்பாலும், ஒளிக்காது பேசும் தலைவர்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள். வாய் திறந்து ராஜீயத்தைப் பற்றிப் பேசுவதற்கான நிலைமையை மறுபடியும் உண்டாக்கிவிட வேண்டும் என்பதுதான் பலபேருடைய ஆசை. பொது ஜனங்கள் யார் பக்கத்தில் இருக்கிறார்கள் என்பதை நிரூபணம் செய்வதே இந்தத் தேர்தலின் முக்கிய நோக்கம் என்று ராஜாஜி போன்ற தலைவர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள். சட்டசபைப் பிரவேச வேலையில் ஈடுபடுவோர் இந்த விஷயங்களையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சட்டசபைப் பிரவேசத்தால், காங்கிரஸின் முடிவான இலட்சியமும் வேலை இனங்களும் மாறிவிட்டதாக, காங்கிரஸ்காரர் எவரும் மயங்கிவிட மாட்டார்கள் என்பதே நமது நம்பிக்கை.

சட்டசபைப் பிரவேச முயற்சி ஆரம்பமானவுடனே, யார் யாரை எங்கெங்கு இந்தியச் சட்டசபைக்கு அபேட்சகராக நிறுத்தலாம் என்ற யோசனைதான் முதலில் தோன்றும். பொதுவிலும் தனிமையிலும் இப்பொழுது காங்கிரஸ்காரர்கள் இந்த யோசனைகளிலும் யூகங்களிலும் இறங்கியிருப்பதில் எவ்வித விந்தையுமில்லை. யாரை நிறுத்துவது என்பதைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது, நாம் சில விஷயங்களை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுதல் நலமாகும்.

கைப்பற்றிய வழி நியாயமா அல்லது தவறா என்பதை, முடிவிலே கிடைக்கும் பலன்தான் நிர்ணயிக்கும் என்று பழைய ராஜீய வாதிகள் நினைத்து வந்தார்கள். கடைப் பிடிக்கும் வழி எதுவாயிருந்தாலென்ன, நல்ல பலன் பெறுவதுதான் முக்கியம் என்று அவர்கள் கருதி வந்தார்கள். மகாத்மா காந்தி இந்தத் தத்துவத்தை உடைத்தெறிந்து விட்டார். நல்ல வழியில் சென்றால், மேலான பலன் தானே கிடைக்கும் என்பதுதான் அவருடைய தத்துவத்தின் சாரம். இதைச் சட்டசபைப் பிரவேச விஷயத்தில் நாம் உபமானம் காட்டினால், எந்த அளவுக்கு அவ்வாறு காட்டுகிறோமோ அதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்.

யார் யாரை நிறுத்துவது, எப்படித் தேர்தலை நடத்துவது என்ற யோசனைகளைச் செய்யும்போதே, காங்கிரஸ் நோக்கங்களையும் இலட்சியத்தையும் நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பங்களையெல்லாம் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும் என்பது நமது யோசனையாகும். சட்ட சபைக்குப் போய் நாம் செய்ய விரும்பும் வேலைகளில் முக்கியமான ஒன்று ஹரிஜன முன்னேற்றமாகும். சட்ட சபைக்கு அபேட்சகர் நிறுத்தும்போதே நாம் ஏன் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளலாகாது?

பரஸ்பர சந்தேகந்தான் முக்கால் வாசி வகுப்புப் பிளவுகளுக்கு அடிப்படையான காரணமாகும். ஹரிஜனப் பிரச்சினை விஷயத்தில் ஹிருதய மாறுதல் வேண்டுமென்று மகாத்மாஜீ அடிக்கடி சொல்லுகிறார். அந்த ஹிருதய மாறுதலை எத்தனையோ விதங்களில் வெளிக் காட்டமுடியும். சட்டசபைப் பிரவேச விஷயத்திலும் தாராளமாய் நடந்துகொண்டு, இந்த ஹிருதய மாறுதலைக் காட்டலாமல்லவா?

சென்னை நகருக்கு ஒரு ஹரிஜனப் பிரதிநிதியைக் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்துவது மிகவும் நலம் என்று நாம் சிபார்சு செய்கிறோம். ஜாதிமத பேதங்களை அதிகமாக எண்ணாமல், யாவரும் பெரும்பாலும் சமரசமாக நடந்துகொள்ளுவது சென்னை நகர் போன்ற இடங்களில்தான். ஏறக்குறையக் காங்கிரஸ் கொள்கைகளுக்கு ஒத்து வரும் ஹரிஜனப் பிரதிநிதி ஒருவரைச் சென்னை நகருக்கு நிறுத்துவது ஒன்றும் பிரமாதமான காரியமல்ல. அவர் அபிப்பிராயங்கள் சற்று முன்பின் இருக்குமானால்கூட, அதனால் ஒன்றும் மோசமில்லை. மற்றவரின் மன மாறுதலைக் காண்பிக்க இந்த நல்ல தருணத்தைப் பயன் படுத்திக் கொள்ளுவதால் விளையக்கூடிய அரிய பலன்கள் எத்தனையோ இருக்கின்றன; அவை போதாதோ?

ஆகையால், சென்னை நகரில் சட்டசபைப் பிரவேச வேலைகளில் ஈடுபட்டிருக்கும் காங்கிரஸ் வாதிகள், ஒரு ஹரிஜனப் பிரதியைச் சென்னை நகருக்கு நிறுத்துவது பற்றிய இந்த யோசனையைப் பலமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவார்களென்று நம்புகிறோம்.

நிஜத்தை உளறுதல்

ஆத்திரம் வந்தவர்களுக்குத் தாங்கள் சொல்லுவது என்னவென்றே புரியாது. சில சமயம் நிஜத்தை உளறிக் கொட்டி விடுவார்கள். இந்த மாதிரி இப்பொழுது ஒரு விஷயத்தை உளறிவிட்டது "மார்னிங் போஸ்ட்" என்ற பத்திரிகை. ஏற்கனவே, வைஸ்ராய் வில்லிங்டன் தமது சொந்தக் காரியங்களை முன்னிட்டு லண்டன் செல்லப்போவதாகச் சொல்லப்பட்டது; இப்பொழுதோ, "பொது நன்மை சம்பந்தமான காரணங்களை முன்னிட்டே லண்டன் செல்லுவதாக" சர்க்கார் கெஜட் சொல்லுகிறது. "இதில் ஏதோ இருக்கிறது; மிதவாதிகளுக்குத் திருப்தியாகச் சீர்திருத்தத்தைத் தயாரிப்பதற்காகவே வில்லிங்டன் தாய்நாடு வருகிறார்" என்று "மார்னிங் போஸ்ட்" நினைத்துவிட்டது. "மிதவாதிகள் தலைவரான தேஜ் பகதூரின் சட்டையைப் பிடித்துக்கொண் டிருக்கிறார் வைசிராய். அந்தத் தேஜ் பகதூரை யாராவது பின்பற்றுவோர் இருக்கிறார்களா? செல்வாக்குத்தானுண்டா? ஒன்றும் கிடையாது" என்று கூறுகிறது "மார்னிங் போஸ்ட்". உண்மைதான். இந்தியாவிலுள்ள எவரையுமே திருப்தி செய்ய வேண்டியதில்லை என்பது "மார்னிங் போஸ்ட்"டின் நோக்கமா? மிதவாதிகளைத் திருப்தி செய்தால் எல்லாம் சரிப்பட்டு விடும் என்று வைசிராய் நினைப்பது உண்மையா யிருந்து, அது வெறும் பகற்கனவாயு மிருக்குமானல், இந்தியாவிலுள்ள எவரையுமே திருப்தி செய்யாமல் உலக முடிவு பரியந்தம் ராஜ்யபாரம் செய்துகொண் டிருக்கலாமென்று "மார்னிங்போஸ்ட்" நினைத்துக் கொண்டிருப்பதை நடுப்பகற்கனவு என்றுதானே சொல்ல வேண்டும்?

சாட்டையடி சரியல்ல

கிழக் குதிரை யொன்றை ஒருவன் மிகவும் ஹிம்சித்துவிட்டான். அதற்காக, மாஜிஸ்திரேட் கடுங்காவல் தண்டனை விதித்தார். இது இங்கிலாந்தில் நடந்த சம்பவம். காமன்ஸ் சபையில் இது பற்றிப் பிரஸ்தாபம் வந்தது. "இந்த மாதிரி வாயில்லா ஜீவன்களை வதைப்பவர்களுக்குச் சாட்டையடித் தண்டனை ஏன் விதிக்கலாகாது? ஏன் அப்படியொரு சட்டம் கொண்டு வரலாகாது?" என்று கேட்டார் ஒருவர். குற்றம் செய்தவனையும் விலங்காகச் செய்துவிட வேண்டும் என்பது தவறு. அவனைத் திருத்துவதே நியாயம் என்பது தற்காலத் தண்டனைத் தத்துவ சாஸ்திரிகளின் தீர்மானமாகும். ஆகையால், சாட்டையடி கூடாதென்று பிரிட்டிஷ் சர்க்காரின் உள்நாட்டுக் காரியதரிசி பதில் சொல்லிவிட்டார். ஆனல், இந்தியாவில், சில சமயம் இந்தத் தண்டனை அனுஷ்டிக்கப்படுகிறதே, இது நியாயமா? இந்தியாவில் மாத்திரம் மனிதனை விலங்கு போல் தண்டனைச் சட்டங்கள் பாவித்து விடலாமா? இந்திய ராஜீய வாழ்வையே நிர்ணயிக்கும் உன்னத அதிகாரம் தனக்கே உண்டென்று உரிமை பாராட்டும் பிரிட்டிஷ் காமன்ஸ் சபை இதை ஏன் கவனிக்கலாகாது?

காந்தியைப் புகழும் கமிஷனர்

"அமெரிக்காவின் அடிமைகளுக்கு அப்ரகாம் லிங்கன் எப்படி விமோசன மளித்தாரோ அதேபோல் தாழ்த்தப்பட்ட இந்திய ஹரிஜனங்களுக்கு காந்தியடிகள் பாடுபடுகிறார்" என்று புல்தானவின் டெப்டி கமிஷனரான டி. வி. ரீஸ் என்பவர் ஒரு ஹரிஜனக் கூட்டத்தில் பேசினராம். தீண்டாமை நம்மை நாமே அழித்துக் கொள்ளும் விஷம் எனவும், நம்கீழ் அடிமைகளாய் இருப்பவர்களுக்கு விடுதலை தாராமல் நாம் மட்டும் விடுதலையை விரும்புவதற்கு அர்த்தமே யில்லையென்றும், ஹிந்து சாஸ்திரங்களில் தீண்டாமைக்கு ஆதாரமில்லையென்றும் குறிப்பிட்டாராம். இவரைப்போன்ற பெரிய உத்யோகஸ்தர்கள் தங்கள் அதிகாரத்தையும், செல்வாக்கையும் உபயோகித்து ஹரிஜன வேலைக்கு எவ்வளவோ உதவி செய்யலாம் என்பதை இங்கு நினைவுறுத்த விரும்புகிறோம்.

உண்மையான காரணம்

பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிக்கவேண்டு மென்பதற்காக, எத்தனையோ ஜகஜ்ஜாலங்கள் நடைபெற்றன. பர்மா ஜனங்களுக்கு என்னென்னவோ ராஜீய ஆசைகளெல்லாம் காட்டப்பட்டன. இப்போது ஒரு உண்மையான காரணம் வெளிப்படுகிறது. லங்காஷயர் துணித் தொழில் முதலாளிகள் இந்தியா மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். பர்மாவை இந்தியாவினின்றும் பிரித்துவிட வேண்டுமென்று அவர்கள் அதில் வாதித்திருக்கிறார்கள். அவர்கள் அதற்குச் சொல்லும் காரணம் என்ன? இந்தியாவுடன் பர்மா இணைந்திருப்பதால், 3 கோடியே 70 லட்சம் கஜம் துணி வியாபாரம் தங்களுக்குக் குறைந்திருக்கிறதாம்; ஆனல், அதனல் இந்தியாவின் துணி விற்பனையோ 2 கோடி கஜம் அதிகமாகப் பர்மாவில் விற்பனையாகிறதாம். இந்தியாவின் துணி பர்மாவில் விற்பதன் மூலம் தங்கள் துணி வியாபாரம் பர்மாவில் குறைவாக நடப்பதால், பர்மாவை இந்தியாவினின்றும் பிரித்துவிட வேண்டுமென்று, லங்காஷயர் முதலாளிகள் சங்கம் ஏகமனதாகச் சர்க்காருக்குச் சிபார்சு செய்துவிட்டது.

பிரிட்டனின் துணி வியாபாரம் நன்றாய் நடக்கவேண்டு மென்பதைக் கவனித்துக் கொள்ளுவதுதான் பர்மாவின் தலையெழுத்தா? பக்கத்திலுள்ள இந்தியாவுடன், வியாபாரம், ராஜீயம், சமூகம் முதலிய பல துறைகளிலும் பர்மாவுக்கு வெகு காலமாக எத்தனையோ சம்பந்தங்கள் ஏற்பட்டுவிட்டன. இந்தியாவினின்றும் பிரிந்தால், அவற்றிற்கெல்லாம் நிச்சயம் பங்கம் ஏற்படத்தான் ஏற்படும். பர்மா அவற்றையெல்லாம் மறந்துவிட முடியுமா? இப்படிப்பட்ட காரணங்களையெல்லாம் வைத்துக்கொண்டு, பர்மாவின் வருங்கால ராஜீய வாழ்க்கையை நிர்ணயிப்பது நியாயமல்ல என்பதைத்தான் நாம் திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறோம்.

‘ சோறு அல்லது ஜெயில் வேண்டும் ’

லயால்பூரிலிருந்து, “ சிந்து அப்ஸர்வரி”ன் நிருபர் பின்வரும் செய்தியை அனுப்பியிருக்கிறார் :—

“ எனது சோற்றுக்கு வழி செய்து தாருங்கள் ; அல்லது என்னைச் சிறைக்குள் தள்ளி விடுங்கள் ”—இது ஷாம் லால் என்பவரின் வேண்டுகோள். ஷாம்லால் நவஜவான் பாரத் சபையின் தொண்டர். போலீஸ் கமிஷனருக்கு எழுதிய கடிதங்களில், மேற் கூறிய வாறு அவர் வேண்டினார். “ஸி.ஐ.டி. உத்தியோகஸ்தர்கள், நான் எந்த இடத்திலும் வாழ முடியாதபடி சங்கடப்படுத்துகிறார்கள்” என்று அக்கடிதங்களில் அவர் தெரிவித்தார். டெபுடி கமிஷனரிடம் நேரே போயும், இந்த வேண்டுகோளைச் செய்து கொள்ள ஷாம்லால் முயன்றார்; ஆனால், அவரை வெளியே பிடித்துத் தள்ளிவிட்டார்கள். என்றாலும், மறுபடியும் கோர்ட்டுக்குள் நுழைவதற்கு முயற்சித்ததன்மேல், கி. பி. கோ. 109—வது பிரிவின் கீழ் ஷாம்லாலைக் கைது செய்த போலீஸ் பந்தோபஸ்தில் வைத்திருக்கிறார்கள்.

5 லட்சம் வேண்டும்

ஒவ்வொரு சமயமும் கூர்ஜர விவசாயி கதைதான். கூர்ஜர நாடு பலபல தடவை கஷ்டம் அநுபவித்து விட்டது. சட்டமறுப்பு இயக்கத்தின் பலனாக, நிலத்தையும் வீட்டையும் சொத்துச் சுதந்திரத்தையும் இழந்து தவிக்கும் கூர்ஜர வாசிகள் எத்தனையோ பேர். இந்த விவசாயிகளுக்கு உதவி செய்ய 5 லட்சம் ரூபாய் தேவையென்றும், அதிலும் உடனே ஒரு லட்சம் ரூபாய் அவசியமா யிருக்கிறதென்றும் ஸ்ரீமான் சாந்து லால் தேசாய் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இது சம்பந்தமாக, மகாத்மா காந்தி எழுதிய ஒரு கடிதத்தையும் அவர் வெளியிட்டிருக்கிறார். மகாத்மாஜீ சொல்லுவதைக் கவனியுங்கள் :—

“ மகத்தான போராட்டங்கள் நடக்கும்பொழுது, தனி மனிதர்களுக்கு நஷ்டங்கள் ஏற்படத்தான் ஏற்படும் ; இல்லாமல் முடியாது. இப்போது அவர்களுக்குச் செய்யும் உதவி நஷ்ட ஈடு அல்ல; அடியோடு சீர் குலைந்தவர்களுடைய கஷ்டங்களுக்குப் பரிகாரம் செய்யவே விரும்புகிறோம் என்பதை நினைவு கூரவேண்டும். நிலம் இழந்தவர்களுக்கு நிலம் திரும்பக் கிடைக்காவிட்டாலும், அவர்களுடைய பின் சந்ததியாருக்குக் கிடைக்கத்தான் போகிறது. இதை அவர்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நாம் சுயராஜ்யம் அடையப் போவதற்கு இதுவே அறிகுறி என்று நான் மதிக்கிறேன்.”

அடியோடு குலைவுற்றுச் சிதைந்த கூர்ஜரக் குடும்பங்களுக்கு உதவி செய்வது தேசத்தின் கடன் என்பதைப் பொது ஜனங்கள் உணர்ந்து தாராளமாய் உதவ முன்வரவேண்டும் என்பதுதான் நமது விருப்பமும் வேண்டுகோளும்.

இங்கிலாந்திலும் உண்மையா ?

இங்கிலாந்தில் உள்ளவர்களெல்லாம் பொய் பேசுபவர்கள் என்று அர்த்தமில்லை. ஆனால் அவர்களது தப்பிதமோ, அல்லது அவர்களுக்குச் சமாசாரம் அனுப்பும் பத்திரிகை நிருபர்களின் தப்பிதமோ—பெரும்பாலும் இந்தியாவைப்பற்றி இங்கிலாந்தில் பொய்கள்தான் அதிகமாய் விலை போகின்றன. இடையிலே அங்குகூட ஒருவர் இந்தியாவைப்பற்றிய உண்மையைச் சொன்னால் ஆச்சரியமில்லையா ?

‘டெய்லி மெயில்’ என்னும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை இந்தியாவைப் பற்றி விஷமத்தனமாய் எழுதப்பட்டுள்ள ஒரு குட்டிப் புஸ்தகத்தை வெளியிட்டிருக்கிறது. அதிலே இந்தியாவில் சில அரசியல் வாதிகளைத் தவிர மற்றப்படி பொது ஜனங்கள் ஸ்வராஜ்யத்தை விரும்பவில்லை என்றும், ஆபத்துக்காலத்தில் கவர்ன்மெண்டாரிடம்தான் மக்கள் அடைக்கலம் புகுவதாகவும் குறித்திருக்கிறது. இவைகளை மறுத்து பீஹாரத்திற்கும், ஒரிஸ்ஸாவுக்கும் கவர்னராய் இருந்த சர் லாரி ஹேமாண்டு என்பவர் ஆணித்தரமான பதில் விடுத்திருக்கிறார். அவருடைய பதிலில் முக்கியமான பாகங்களைக் கீழே தருகிறோம்.

‘இந்தியாவில் பொது ஜனங்கள் ஸ்வராஜ்யத்தை விரும்பவில்லையென்றால் மஹாத்மா காந்தியை ஆதரிப்பானேன் ?’

‘ அவர் வார்த்தைப்படி ஆயிரமாயிரமாய் ஜனங்கள் ஜெயிலுக்குப் போவானேன் ?’

‘ பலாத்காரப் புரட்சிக்காரர்களைக் கூடப் பொது ஜனங்கள் மறைத்து வைத்துக் காப்பாற்ற விரும்புவானேன் ?’

‘ஆபத்துக் காலத்தில் அரசாங்கத்தாரிடம் அடைக்கலம் புகும் ஜனங்களே அரசாங்கத்திற்கு விரோதமாய் மறைந்துள்ள புரட்சிக்காரர்களுக்குக் கூட உதவி செய்வானேன் ?’

இக் கேள்விகளிலிருந்தாவது இங்கிலாந்து இந்தியாவின் உண்மை நிலையை அறிந்து கொள்ளுமா ?

பிரிட்டன் தந்த பிச்சை

கென்யா நாட்டுச் சுதேசிகள், தங்களது சொந்த தேசத்தில் குடியிருக்க இடமில்லாமல் தெருவில் திண்டாடுகின்றனர். அவர்களுக்கென்று இதுவரையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இடம் 1474 சதுர மைல்கள்தான். இப்போது இந்தச் சுதேசிகளின் மீது கருணைகொண்டு பிரிட்டன் இன்னும் 2000 சதுர மைல்களை அவர்களே வைத்துக் கொள்ளட்டும் என்று பிச்சை அளித்திருக்கிறது. இப்பிச்சை மிகவும் தாராளமானது என்று தான் எவரும் நினைப்பர் ; ஆனால் உண்மை அப்படி யில்லை.

கென்யாவிலுள்ள வெள்ளையர்கள் 2050 பேர்கள். அவர்களது வாசத்திற்காக 7090 சதுர மைல்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் லட்சக் கணக்கான சுதேசிகளுக்கு இந்த அளவில் பாதிதான். அதுவும் தாராள நோக்கத்தோடு கொடுக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுகிறது. இக்கணக்கிலிருந்து பார்த்தோமானால் ஒரு வெள்ளையருக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதே அளவுள்ள இடத்தில் 2000 சுதேசிகள் வாழும்படி நேருகிறது. தவிர வெள்ளையர்கள் வசிக்கும் இடங்கள் நல்ல செழிப்பான நிலங்கள். சுதேசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்கள் செழிப்பானவையோ இல்லையோ, எதுவானாலும், அவர்களது வாழ்க்கைச் சௌகரியங்களுக்கும், விவசாயத்திற்கும் இவ்வளவு போதாது.

சரி ! சுதேசிகளின் கதி இது. நமது இந்திய சகோதரர்கள் பலர் அங்கிருக்கிறார்களே அவர்களின் கதி யாது ? ‘கென்யா டெய்லி மெயில்’ கூறுகிறது:-

‘ஒரு முக்கியமான விஷயத்திலாவது கென்யா இந்தியர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. இந்தியர்கள் பிரிட்

டிஷ் சாம்ராஜ்யத்தில் கடைப்பட்ட உரிமையாளராய்த்தான் மதிக்கப்படுகின்றனர்'. இந்தியர்கள் முறைபாடுகளெல்லாம் குப்பைத் தொட்டிக்கு அர்ப்பணமாயின.

தேசத்திற்குத் தேசம்

காந்தியடிகளை லண்டனில் வரவேற்று விருந்தளித்த மூரியல் லெஸ்டர் என்னும் ஆங்கில மாது சிரோன்மணி சமீபத்தில் அலகாபாதில் அடியிற்கண்டவாறு கூறினார்:—

'ஒவ்வொரு தேசத்தாரும் மற்றத் தேசத்தார்களுடைய வாழ்க்கை, துன்பங்கள், கொள்கைகள், நோக்கங்கள், போராட்டங்கள், சமீப கால சரித்திர சம்பவங்கள் யாவற்றையும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். மூன்று வருஷத்திற்கு முன்னிருந்த உலகம் இப்போது இல்லை; இன்று இது ஒர் புது உலகம். இன்றுள்ள பொருளாதார நெருக்கடி மனிதனது ஆன்மீக வாழ்க்கையைக்கூட மாற்றியுள்ளது. பலாபலன் நிர்ணயத்தை வேறாக்கிவிட்டது. உண்மையை மனிதன் நேருக்கு நேராகக் காணும்படி செய்திருக்கிறது.'

ஒரு தேசம் அத்தேசத்தவரிடமுள்ள பொருளாதார எதேச்சாதிகாரம், அறிவு மயக்கம், அடிமைத்தனம் இவைகளாலேயே கெட்டுப் போகிறது. 'ஒவவொருதேசமும் மற்ற தேசங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிரம்ப உண்டு.'

மற்றத் தேசங்களைக் காட்டிலும் இந்தியாவின் தற்கால நிலை மிகவும் மோசமாயில்லையா? என்று கேட்டதற்கு 'இங்குள்ள நிலைமை மற்றத் தேசங்களைக் காட்டிலும் மோசமோ இல்லையோ—நான் அறியேன். இப்போதுள்ள நிலைமையில் அதிகமாகக் கஷ்டப்படுவது இந்தியாவா, சைனாவா என்று ஒருவரும் நிச்சயிக்க முடியாது. சைனாவில் ஒரு தேசியத் தலைவர்கூட இல்லை. நான் அங்கு சென்றிருந்தபோது அவர்கள் காந்தியடிகளைப் பற்றி ஏதாவது சொல்லவேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டனர்'.

திரு. லெஸ்டர் சொல்லியிருப்பவை முழுவதையும் நாம் அப்படியே ஆதரிக்கிறோம். தேச நேசங்களுக்கிடையில் நேசம் வளர ஒரு தேசம் மற்றொரு தேசத்தைப் பற்றி நன்கு அறிந்து கொண்டால்தான் முடியும்.

ஐரோப்பாவில் ஆயுதப் போட்டிப் பந்தயம்

ஜெனிவாவில் திரும்பவும் ஆயுதப் பரிகரண மகாநாடு கூடப்போகிறது. அது வெற்றிகரமாக நடக்காவிடில் அதைக் காட்டிலும் மேல்நாட்டு நாகரிகத்துக்கு ஆபத்து வேறொன்றுமில்லை. துரதிருஷ்ட வசமாக இப்போதைய ஐரோப்பிய நாடுகள் ஆயுத விரிகரண வித்தையில்தான் கைதேர்ந்திருக்கின்றன. தேசத்திற்குத் தேசம் ஆயுதப் போட்டி அதி தீவிரமாய் நடந்து வருகிறது. பிரிட்டன் ஆயுதப் படையில் மற்றத் தேசங்களைக் காட்டிலும் முன்னணியில் நிற்க முயல்கிறது. பிரான்ஸும், ஜர்மனியும் போட்டி போடுகின்றன. இங்கிலாந்தில் 1400 ஆகாயச் சண்டைக் கப்பல்கள் இருக்கின்றன. பிரான்ஸிலே 3000 கப்பல்கள் சண்டைக்குத் தயாரயிருக்கின்றன. ஜர்மனி தன்னுடைய புதிய பெரிய ஆகாயக் கப்பல் மூலம் 6000 மைல் சுற்றளவில் எதை வேண்டுமாயினும் தாக்கக்கூடிய வலிமையோடு காத்திருக்கிறது. இன்னும் புதிய படைகள் தயாராய்க்கொண்டு வருகின்றன. இந்த நிலையில் ஆயுதப் பரிகரண மகாநாடு கூடுகிறது. என்னவாய் முடியுமோ? யார் கண்டார்?

துருக்கி துருக்கியர்களுக்கே

துருக்கியில் சமீபத்தில் ஒரு சட்டம் போடப்பட்டுள்ளது. அச்சட்டப்படி பரதேசச் சேவகர்கள், நாவிதர், தையற்காரர்கள், செருப்புத் தைப்போர், மண்டி குமாஸ்தாக்கள், பாடகர்கள் முதலிய யாவரும் உடனே தங்கள் வேலைகளை விட்டு விலகிவிட வேண்டும். ஆனால், தொழிலாளர், வாசல் காப்போர், நாடகக்காரர், அச்சாபீஸ்காரர், ரசாயனக் கடைக்காரர், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் முதலான அயல் நாட்டார்களுக்கு மட்டும் 3 மாதம் முதல் 1 வருஷம் வரை வேலையை விட்டு நீங்கக் காலந் தரப்பட்டுள்ளது.

'மாற்றானுக் கிடங்கொடேல்' என்று ஔவை சொன்னாள். அதைத் துருக்கி நடத்திக் காட்டுகிறது.

கதர் கட்டுங்கள்.

இந்தியாவில் முடியாதா?

லார்டு லண்டன் டெர்ரி பிரிட்டிஷ் கேபினெட்டின் சார்பாகப் பந்தயப் போட்டி பில்லைப்பற்றி 'கட்டுப் பாட்டோடு அமைக்கப்படும் சூதாட்டங்களை அடக்கி யாள்வதை விட்டுவிட எந்த அரசாங்கத்துக்கும் உரிமையில்லை' என்று பேசியிருக்கிறார்.

நாம் அவரது இந்த வாக்கியத்தை அப்படியே அட்சரம் விடாமல் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இதே கொள்கையை இந்திய அரசாங்கம் ஏன் ஒப்புக்கொள்ளக் கூடாது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. இங்கிலாந்தில் அசல் நாட்டுப் போட்டிப் பந்தயங்களில் கலந்துகொள்ள ஒருவரும் அனுமதிக்கப் படுவதில்லை. இங்கு மட்டும் எந்தப் போட்டிப் பந்தயமும் நடைபெற அரசாங்கம் அநுமதிப்பானேன்.

அசல் நாட்டுக் குதிரைப் பந்தய டிக்கட்டுகள் இந்தியாவில் பெருவாரியாய் விலையாகின்றன. இதனால் பெருத்த தொகைகள் வருஷா வருஷம் இந்தியாவை விட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. தவிர, டிக்கட் விற்பனையில் எவ்வளவோ மோசடிகள் நடப்பதாக், சமீபத்தில் நடந்த பல கேஸ்களால் தெரியவருகிறது.' ஏழை இந்தியனைக் கொள்ளையடிக்கும் பரதேசப் பந்தயப் போட்டிகளை நமது அரசாங்கம் நிறுத்த முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

ஒட்டாவா லாப நஷ்டம்

ஒட்டவா ஒப்பந்தத்தின் லாப நஷ்ட நிர்ணயம் அடுத்த மாதம் அரசாங்கத்தாரால் வெளியிடப் பெறும். ஜூலை மாத மத்தியில் கூடப்போகும் இந்திய சட்டசபையில் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படும். இவ்வறிக்கையில் இவ்வொப்பந்தத்தினால் பெருவாரியான நன்மை உண்டாய் விட்டதாய்க் காட்ட முயற்சிக்கப் படலாமெனத் தெரிகிறது.

ஆனால் உண்மை என்னவெனில் இவ்வொப்பந்த உபத்திரவத்தினால் ஜெர்மனி, பிரான்ஸ், ருமேனியா. நெதர்லெண்டு முதலான தேசங்களுக்கு இந்திய ஏற்றுமதி செய்து வந்த அரிசி, சணல், தோல் முதலியவைகள் மிகவும் குறைந்து விட்டதென்று சர்க்காரின் ஏற்றுமதி ரிஜிஸ்தர் கூறுகிறதாம். இதில் எது உண்மை என்று நாம் சொல்லவேண்டியதில்லை. வாசகர்களே அறிவர்.

சாமியார் மந்திரம்

(தி. ஜ. ர)

"முன்னே என்னமாய் இழைந்தார்கள்!" என்று ஊரிலுள்ள பெண்களெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

லிங்கமும் ராஜுவும் இப்பொழுது பேசுவதே யில்லை. ஒருவரிடம் ஒருவர் பரம அந்நியர்களைப் போல் நடந்துகொண்டார்கள். இதைப்பற்றி ஊரிலுள்ள பெண்கள் பேசுவதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில், முன்னே அந்த நண்பர்கள் மிகவும் அந்தரங்க நட்புக் கொண்டிருந்தார்கள். எங்கே சென்றாலும் இரட்டைப் பிறவிபோல, இணை பிரியாமல் போவார்கள். எதைச் செய்வதாயிருந்தாலும் ஒருவரையொருவர் கலக்காமல் செய்யமாட்டார்கள். பழைய சிநேகிதத்தைப் பற்றி, இன்னும் கொஞ்சம் விஸ்தாரமாய்ச் சொல்லி, இப்பொழுதைய நிலைமையை ஒத்திட்டுப் பார்ப்போமானால், நாமே ஆச்சரியப் படும்படியாக இருக்கும்.

"ராஜு, செல்லத்துக்கு வெள்ளிக் கூஜாச் செய்யவேண்டுமாம். எத்தனை சேரில் செய்யலாம்?"

"ஏனப்பா லிங்கம்--சிவப்புக் காளைக்குக் கொம்பு தீய்த்து விடலாமா?"

"என்னவோ தலையை வலிக்கிறது. உடம்பைக் கடுக்கிறது. முத்துப் பண்டிதன் (வைத்தியன்) கண்டத் திப்பிலி ரஸம் வைத்துச் சாப்பிடு என்றான். உன்னைக் கேட்டுப் போகலாமென்று வந்தேன்."

"மகாத்மா காந்திக்கு இருநூறு ரூபாய் நாம் இருவரும் சேர்ந்து கொடுக்கவேண்டும். உனக்கும் சேர்த்து நானே கையெழுத்துப் போட்டு விட்டேன்."

இப்படிப் பல விஷயங்களைப் பற்றியும் ஒருவரிடம் ஒருவர் யோசிப்பார்கள். கடுகு, வேலி, பூஷணிச் செடி, காளை மாடு, கலியாணம், படுக்கையறை உள்படச் சகல விஷயங்களைப் பற்றியும் கூச்சமில்லாமல், ஒளிக்காமல் பேச்சு வார்த்தைகள் நடக்கும். இருவரையும் சேர்ந்தாற் போல்தான் பார்க்கமுடியும். தெருவில், கோயிலில், குளத்தில், களத்தில், அல்லது அடுத்த ஊரில்—எங்கேயானாலும் சரி; ஒருவரை மாத்திரம் தனியாகப் பார்க்கவே முடியாது. ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் இருவரும் வெகு நாளாக வாதம் செய்து கொண்டே வந்தார்கள். "ஊருக்கு ஒரு புத்தகசாலை வேண்டும்" என்பது லிங்கத்தின் அபிப்பிராயம். "அது கூடாது. இந்தக் காலத்துப் புத்தகசாலைகள் தர்மத்தைக் கெடுக்கும்; ஊர்க் கட்டுப்பாட்டைக் குலைத்து விடும். ஏனென்றால், நல்ல புத்தகங்களே தமிழில் கிடையாது" என்பது ராஜுவின் கருத்து. இதைப்பற்றி வீட்டிலும் வெளியிலும் தனியேயும் பலர் நடுவேயும் எத்தனையோ தடவை விவாதம் செய்திருக்கிறார்கள். என்றாலும், பிறர் இந்த விஷயம் ஊருக்கோ தங்களுக்கோ சொந்தமில்லைப் போலவே நடந்துகொண்டு வந்தார்கள். இவர்கள் பேச்சை வேடிக்கையாகக் கவனிப்பார்கள்; அதில் கலந்தும் கொள்ளுவார்கள். ஆனால் அதோடு சரி.

இந்த இரண்டு சிநேகிதர்களும் திடீரென்று அசலூர் மனிதர்கள் போல் மாறிவிட்டார்கள். லிங்கம் தெருவின் கீழக் கோடிக்குப் போனால், ராஜு மேலக் கோடிக்குச் சென்று விடுவான். ராஜு கோயிலிலிருந்தால், லிங்கம் குளத்தங்கரையில் நிற்பான். ஒருவன் கிஸ்தி செலுத்தினால், மற்றவன் பாக்கி வைத்து விடுவான். இவ்வளவு எதிரிடை; இத்தனை போட்டி. "டு விட்ட சின்னக் குழந்தைகள் மாதிரி யிருக்கிறது இவர்கள் நடப்பு" என்று சிலர் பல சமயம் பேசிக்கொண்டது இருவர் காதிலும் விழுந்ததுண்டு. என்றாலும், இதனால் அவர்கள் நடை முறைகள் பின்னும் விசித்திரமாய் மாறினவே யல்லாமல் திருந்தவில்லை.

"ராமுடு, இது என்ன விஷயம்? அப்படி யென்ன இரண்டு பேருக்கும் நடந்திருக்கும்?"

"தேவடியாக் கள்ளன்கள். அப்படி இழைந்த போதே, ஏதோ அதியாய்ப் போகிறான்கள் என்று மாத்திரம் எனக்கு அப்போதே மனத்தில் பட்டது. ரொம்பத் தலைகீழாய் நிற்கலாமா? நின்றால் இப்படித்தான் முடியும்!"

இப்படிப் பேசிக்கொண்டார்கள் இரண்டு பேர்கள். இந்த இரண்டு பேருக்கும் மாத்திரமல்ல, ஊரிலுள்ள எவருக்குமே இந்த நண்பர்கள் பிரிந்த தன் காரணம் தெரியவே தெரியாது; அது ஒரு மூடு மந்திரமாகவே இருந்து வந்தது.

ஊர் பேர் தெரியாத அந்தச் சாமியார் இப்பேர்ப்பட்ட சமயத்தில்தான் இந்த ஊருக்கு விஜயம் செய்தார்.

சாமியாருக்கு 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' அல்லவா? வெகு சீக்கிரத்தில் கிராமத்திலுள்ள அத்தனை பேருக்கும் ஒரு பக்தி விசுவாசம் உண்டாயிற்று. எந்த ஊரிலும் சந்தேகப் பிரகிருதிகள் இல்லாமலிருக்குமா?

ராஜுவும் லிங்கமும் ஒருவருக்கொருவர் விரோதிகள் போலாகிவிட்டார்கள். என்றாலும், இருவரும் இந்தச் சாமியார் விஷயத்தில் மாத்திரம் வெகு சந்தேகங் கொண்டார்கள். இருவர் மனோபாவமும் ஒரே 'சோட்டி'ல் உருள ஆரம்பித்தன. இருவருக்கும் அது தெரியாது; ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள வில்லை. இவ்வளவு சீக்கிரம் ஊரையே வசீகரித்த சாமியார் எப்பேர்ப்பட்டவரா யிருக்க வேண்டும்? ருஷ்ய தேசத்தில் ராஜக் கிரகத்திலுள்ள ராணிகளையெல்லாம் நிலை தடுமாறச் செய்து மனங்கவர்ந்த ரஸ்புடீன் மாதிரி கள்ளச் சாமியாரா யிருக்கலாமல்லவா? சொல்லிக்கொண்டாற்போல, இருவரும் இப்படி யெல்லாம் நினைத்தார்கள். ஆகையால், இருவரும் சாமியாரிடம் அண்டவே யில்லை.

ஆனால், அந்தச் சாமியாரோ மற்றச் சாமியார்களைப் போல அல்ல. ஊர் யோக க்ஷேமங்களை யெல்லாம் விசாரித்தார். லிங்கம், ராஜு என்ற இருவரைத்

பற்றியும் அறியவந்தார். நேரே பார்ப்பதைவிட, கேள்வி ஒன்றினல் மாத்திரம் அறிய வருபவர்களிடம் சில சமயம் நமக்கு அளவு கடந்த பிரியம் ஏற்படுவது உண்டல்லவா? எல்லாரும் லிங்கத்தையும் ராஜுவையும் பற்றிப் பரிகாசமாய்த்தான் பேசினர்கள். என்றாலும், அந்தப் பேச்சுகளைக் கேட்ட அதனலேயே சாமியாருக்கு அந்த இருவரிடமும் ஒரு அன்பு உண்டாயிற்று. இதற்கெல்லாம் காரணம் எப்படிச் சொல்லுவது?

ஒருநாள் லிங்கம், ராஜு, சாமியார் இந்த மூவரும் மாத்திரம் தனியே இருந்தார்கள்.

லிங்கம் சும்மாச் சிரித்துக்கொண்டேயிருந்தான். ராஜு புருவத்தை நெளித்துக்கொண்டேயிருந்தான். சாமியார் அனுயாசமாய்த் தமது மூக்குக் கண்ணுடியைத் துடைத்துக் கொண்டு, "நான் பரதேசி; நாளைக்கு இந்த ஊரை விட்டுப் போகப்போகிறேன்" என்று சொல்லி, தட்டென்று நின்று "என்ன ராஜுகாரு?" என்றார். ராஜு பேசவில்லை; லிங்கம் 'கலு'க்கென்று சிரித்தான்.

"அதற்குமுன்னல் உங்கள் இருவரையும் பார்க்க வேண்டுமென்று எனக்கு என்னவோ ஆசை யுண்டாயிற்று" என்ற சாமியார் கண்ணுடியை மூக்கிலணிந்து கொண்டார்.

"பார்த்து விட்டீர்க ளல்லவா?" என்று அழுத்தந் திருத்தமாய், ஒரு முரட்டுசுரத்துடன் கேட்டான் ராஜு.

சற்றுக்கூடப் பதட்டப்படாமல், "பார்த்தாயிற்று. ஒரு சந்தேகம். அதை நிவர்த்தித்துக்கொள்ள ஆசையாயிருக்கிறது" என்று சொல்லிய சாமியார், எழுந்திருந்து, லிங்கம், ராஜு இருவரையும் ஒரு புதுத் தினிசாய்ப் பார்த்தார்.

"அது என்ன சந்தேகம்?" என்றான் லிங்கம்.

"நமது தேசத்தில் பாரதியார் என்ற ஒரு கவி இருந்தா ரல்லவா? அவரைத் தெரியுமா, உங்களுக்கு?" என்றார் சாமியார்.

"தெரியும்; என் வீட்டில் அவர் பாட்டுப் புஸ்தகம்கூட ஒன்றிருக்கிறது" என்று இருவரும் சேர்ந்தாற்போல் சொன்னர்கள்.

"ஐந்து தலைப் பாம்பென்பான் அப்பன்— ஆறுதலை என்று மகன் சொல்லிவிட்டால், நெஞ்சு பிரிந்திடுவார்" என்று அவர் பாடி யிருக்கிருர் அல்லவா? இதைப்பற்றி எனக்கு ஒரு சந்தேகம்" என்றார் சாமியார்.

லிங்கம், ராஜு, இருவரும் திடுக்கிட்டார்கள்; பேசவில்லை.

"இனிமேல் நீங்கள் ஒளிக்காமல் பேசவேண்டும்" என்று அதிகாரத் தொனியில் சொன்னர் சாமியார்.

லிங்கத்துக்கும் ராஜுவுக்கும் என்ன சண்டை? எதனல் விரோதம்? இதைப் பற்றி யெல்லாம் பிரச்னைத்தரங்கள் நடந்தன. சண்டைக்குக் காரணமா? ஒன்றுமில்லை. ஏதோ ஒரு நாள் லிங்கம் தலையை இப்படிச் சாய்த்தான்; ராஜு அப்படிச் சொன்னன். ஒருவருக்கொருவர் என்னவோ அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள். நெருங்கிய சிநேகிதர் பிரிய அதெல்லாம் போதுமோ? என்றாலும் பிரிந்து விட்டார்கள். சாமியார் விசாரணையில் இது விசதமாயிற்று.

"என் சந்தேகம் தெளிந்துவிட்டது. இனிமேல் உங்களுக்கு ஏதாவது சம்சயமுண்டானல் கேளுங்கள்" என்று, நகைத்துக்கொண்டே வினவினர் சாமியார்.

வெட்கத்துடன் இரண்டு நண்பர்களும் தலைகுனிந்து நின்றார்கள். மௌனம்.

"குழந்தைகளே!" என்று பரிவோடு கூப்பிட்டார் சாமியார். சற்று நின்று மறுபடியும் சொல்லலானர்:-"குழந்தைகளே! உலகத்தில் சின்ன விஷயம் பெரிய விஷயம் என்று கிடையாது. நமது மனம் சின்னதைப் பெரிதாகவும் பெரியதைச் சின்னதாகவும் செய்துவிடுகிறது. சிநேகிதம், அன்பு, வாஞ்சை என்பதெல்லாம் தலையாட்டல், வாய்ப் பேச்சு, காசு, சுகம், தருக்கம் இதிலெல்லாம் இல்லை. சிநேகிதம் என்பது உள்ளத்திலுள்ள அக்னி. உள்ளங்கோணினல் உலகமே கோணிவிடும். நீங்கள் இருவரும் பழயபடி ஏன் கையைக் கோத்துக் கொண்டு வெளியே போகக்கூடாது? அது எனது ஆசை" என்றார்.

சாமியார் சொன்னதெல்லாம் இருவருக்கும் புரிந்ததோ என்னவோ; அது எப்படியானலும், இருவரும் கைகோத்துக் கொண்டுதான் வெளியே போனர்கள்.

சாமியார் சொன்னபடி மறுநாள் வந்தவாறே பரதேசம் போய்விட்டார்.

கொஞ்சு நாளைக்கெல்லாம் ஊரிலுள்ளவர் பேசிக் கொண்டதுதான் சுவாரஸ்யம்.

"லிங்கமும் ராஜுவும் பழயபடி சிநேகமாகி விட்டாப்போல் இருக்கிறதே" என்று ஒருவர் கண்ணை யடித்துக்கொண்டே வினவினர்.

"ஆமாம்; அதுதான் ஊரெல்லாம் சிரிக்கிறதே. அந்தச் சாமியார் என்னவோ மாயாவி. ஏதோ மந்திரம் செய்து விட்டான். இருந்தாலும் இந்தப் பசங்கள் முன்னத்தனை ஒட்டிக்கொள்ளக் காணும்" என்றார் மற்றவர்.

இந்த மாதிரி பேச்சு ராஜுவின் செவியிலும் விழுந்தது.

"அப்பா! ஒரு தடவை உள்ளங் கோணினல் உலகத்தில் ஏற்படும் கோணலை நிமிர்த்துவது மனுஷ்யனல் ஆகிற காரியமல்ல" என்று தனக்குத் தானே சொல்லிப் பெருமூச்சு விட்டான் ராஜு.

இப்பொழுது, ராஜு-லிங்கத்தின் சிநேகிதம் இருவருக்கும் பெரிய பாரமாயிருக்கிறது. என்றாலும், அந்தப் பாரத்தைக் கீழே போட்டுவிட இருவருக்கும் மனமில்லை; துணிவில்லை என்று வேண்டுமானலும் கூறலாம். "இதுதான் அந்தச் சாமியாரின் மந்திரம்" என்று ஏன் சொல்லலாகாது?

மகாத்மா காந்தி எழுதியவை

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம் ...	2	0	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

‘தீமையை எதிர்க்காதே’

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.)

[மகான் இயேசுவின் பேருபதேசங்களில் மிக முக்கியமானது “தீமையை எதிர்க்காதே” என்பதுதான். இதைத் தலைப்பாய்க் கொண்டு செய்ததொரு பிரசங்கத்தில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் “அன்பு ஓர் மின்சார சக்தியைப் போன்றது” என்று விளக்கியிருக்கிறார். அன்பு-சக்தியைக் கொண்டு தீமையை வெல்லுவது என்ற தத்துவத்தை ராஜாஜி விவரித்திருக்கும் பகுதியை Chats Behind Bars *என்ற நூலிலிருந்து கீழே மொழி பெயர்த்துத் தந்திருக்கிறோம்.]*

முன் காலத்தில், கல்வி போதிப்பதற்குக் கோப வார்த்தைகளும், ஆத்திரப் பார்வைகளும், தடிக்கம்பும் உபயோகிக்கப்பட்டன. இவற்றை உபயோகிக்காத உபாத்தியாயர்களிடம், குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களுக்குக்கூட நம்பிக்கை யில்லாதிருந்தது. இப்பொழுதோ அன்பு முறையே அனுஷ்டிக்கப்படுகின்றது. சிரித்து விளையாடும் வழிதான் மேலோங்கியிருக்கிறது. குழந்தைகளை எந்த உபாத்தியாயராவது அடித்தால், அவர் வேலையை விட்டு நீக்கப்படுகிறார். இவ்விதமாகவே, அரசியலிலும் பகைமை முறை இன்று ஆதிக்கம் புரிந்துகொண்டிருக்கலாம். ஆனால், புதிய வழி தலை தூக்கி நிற்கக்கூடிய ஒரு காலம் வரும். பழைய உபாத்தியாயர் எவ்வாறு மாறிவிட்டாரோ அதைப் போலவே, அன்பு-சக்தியை நாம் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவாறு, அரசியல் உள்பட வாழ்க்கையின் எல்லாத் துறைகளையுமே மாற்ற வேண்டி வரும். பயமுறுத்தும் சக்தியை விட, அன்பு-சக்தி எவ்வளவோ அதிகத் திறமை வாய்ந்ததாகவும் எவ்வளவோ அதிக விரைவாய்ப் பலன் தருவதாகவும் இருப்பதை நாம் காண்போம்.

சத்தியம், வெவ்வேறு பொருள்களில் வெவ்வேறு விதமாக இருக்கும் என்று எண்ணாதீர்கள். உலக முழுவதிலுமே, ஒரு அணுவில் போலவே ஆகாயத்திலுலவும் சூரியனிலும், உண்மை ஒரே விதமாகத்தான் இருக்கின்றது. “தீமையை எதிர்க்காதே” என்பது கிருஸ்தவர் பைபிளிலிருந்து எடுக்கப்பட்ட ஓர் வசனமாகும். டால்ஸ்டாய் கூறியதுள்பட எல்லா சத்தியாக்கிரகங்களின் வாசகமும் இதுதான். சத்தியாக்கிரகத்தைக் கண்டு பிடித்தவர் மகாத்மா காந்தி யென்றோ, டால்ஸ்டாய் என்றோ, கிருஸ்து என்றோ, புத்தர் என்றோ எண்ணிவிடாதீர்கள். உலகத்திலுள்ள சகல புத்தகங்களிலும் மிகப் புராதனமானவை நமது வேதங்கள்தான். அவற்றிலேயே சத்தியாக்கிரக தத்துவம் காணப்படுகின்றது. உலகின் இந்த மிகப் புராதனமான ஞானம், புத்தர், கிருஸ்து, டால்ஸ்டாய், நமது காலத்திய மகாத்மா காந்தி ஆகியவரால் வழி வழியே உபதேசிக்கப்பட்டு வந்திருக்கிறது. இவ்வுபதேசம் “தீமையை எதிர்க்காதே” என்ற தத்துவந்தான்.

மகாத்மாஜீ தீமையை எதிர்க்க விரும்புகிறார். ஆகையால், கிருஸ்து, டால்ஸ்டாய் உபதேசங்களுக்கும் மகாத்மாஜீயின் உபதேசங்களுக்கும் இவ்விஷயத்தில் வேற்றுமை யிருக்கின்றது என்று சில ஜனங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் வேற்றுமை ஒன்றுமில்லை. “எதிர்த்தல்” என்ற வார்த்தையின் சரியான அர்த்தத்தை நாம் நன்றாக விளங்கிக் கொண்டால், அந்த வேற்றுமை தானே மறைந்து போகும். “தீமையை எதிர்க்காதே” என்று கூறுவதன் அர்த்தம், “தீமைக்குப் பதில் தீமையும் பகைமைக்குப் பதில் பகைமையும் புரியாதே” என்பதுதான். இவ்விஷயத்தில் மகாத்மா காந்தியின் உபதேசங்களுக்கும் கிருஸ்துவின் உபதேசங்களுக்கும் எவ்வித வேற்றுமையு மில்லை. தீமை புரிவோருக்கு நன்மையைப் புரிதலும் தீமையை எதிர்க்கும் செயல்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், “தீமையை எதிர்க்காதே” என்பதிலுள்ள “எதிர்த்தல்” என்ற பதத்திற்கு இதுவல்ல அர்த்தம். தீமையைத் தீமையால் எதிர்க்காமல் நன்மையால் எதிர்க்க வேண்டும் என்பதுதான் அதன் கருத்து.

கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஒரு பையன் விழிக்கிறான். “அவனை அடிக்காதீர்கள்; பட்சமாக நடத்துங்கள்” என்று கொஞ்ச காலத்துக்கு முன் நான் சொன்னேனானால், சில ஜனங்கள் கேலியாகச் சிரித்திருப்பார்கள். “தீமை செய்வோருக்கு நன்மையைச் செய்யுங்கள்” என்று காந்திஜீ சொல்லுவதைக் கண்டும், அதே மாதிரியே சில ஜனங்கள் நகைப்பார்கள். தீமை செய்தவனுக்கு நன்மை செய்தீர்களாயின், உடனே அவனுடைய மனது மாறிவிடுகிறது. ஆனால், தீமைக்குப் பதில் தீமையே புரிவீர்களானால், அவனுடைய மனது இரு மடங்கு தீயதாகி விடுகிறது. நல்ல எண்ணங்கள், நல்ல வார்த்தைகள், நல்ல செயல்கள் ஆகியவற்றில் கணக்கிட முடியாத ஏராளமான சக்தி இருக்கிறது. அந்தப் பிரம்மாண்டமான சக்தியைக் காரியத்திற் பூட்டிப் பயன்படுத்த வேண்டும்.

இந்தியாவில் நாம் செய்து கொண்டிருக்கும் சத்தியாக்கிரகப் பரிட்சை, நமது சுதந்திரத்தைப் பெறுவதற்காக இயற்றப்படும் நமது நாட்டுக்கு மட்டிலுமே உரிய பரிட்சையன்று; அது உலகம் பூராவுக்கும் பொதுவான ஒரு சக்தியாக விருந்தால்தான், இந்தியாவின் போராட்டம் உலக முன்னேற்றத்தில் ஒரு படியாக விருக்குமானால் தான், ஈசுவரன் நமது சத்தியாக்கிரகத்துக்கு உதவி புரிவார். சத்தியாக்கிரகம் உலக முழுவதற்கும் பொதுவானதோர் சக்தியாக விருப்பதனால் தான், அது ஜீவித்திருப்பதுடன், பிராதான்யமும் பெற்றிருக்கின்றது. நமது பெருந் துன்பமே இந்த முறையை நாம் கண்டுபிடிக்கச் செய்தது. தீமை எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு பரிட்சையும் பெரிதாகின்றது; உலக சரித்திரத்தில் இந்தியாவின் கீர்த்தியும் பெரிதாகின்றது. இந்தப் போராட்டத்தை நடத்திச் செல்லுகையில், இதுதான் நமது ஆசையாயிருக்கவேண்டும்.

ஒரு கலாசாலைத் தலைமை ஆசிரியர் ஒரு வகுப்பிடம் அலட்சியம் காட்டத் துவங்கினால், அவ்வகுப்பு உபாத்தியாயர் தமது மேஜை டிராயரைத் திறந்து பிரம்பை வெளியே எடுத்து விடுகிறார். அவர் எந்த நிமிஷத்தில் அவ்வாறு பிரம்பை எடுக்கிறாரோ அந்நிமிஷமே பல மாதமாகச் செய்திருந்த வேலையெல்லாம் நாசமாய்ப் போகிறது. இவ்வாறே, அஹிம்சா தர்மத்திலிருந்து ஒரே ஒரு அங்குலம் பிறழ்ந்தோமாயினும், நமது பல்லாண்டு வேலையெல்லாம் பாழாய்ப் போய்விடும். நீங்கள் அதற்குப் பல விதமான சாக்குகளைக் கூறலாம். ஆனால், நாம் சீக்கிரத்தில் வெற்றி பெறாததற்குக் காரணம், நாம் சத்தியாக்கிரகத்தின் தத்துவங்களைச் சரியாக, மாசு மருக் கலக்காத முறையில் அனுஷ்டிக்காததுதான் என்று காந்திஜீ சொல்லுகிறார். அது உண்மையே யாகும்.

ஒரு ஆங்கிலேயனோ, ஐரோப்பியனோ மகாத்மாஜீயோடு சம்பாஷணை செய்தானாயின், சம்பாஷணை முடிவில் அவன் என்ன நினைக்கிறான் தெரியுமா? "இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களும் இந்த மனிதர் மாதிரியிருந்தால், விவகாரத்தைச் சல்லிசாகத் தீர்த்துவிடலாமே" என்றுதான் நினைக்கிறான். எல்லா ஜனங்களும் அவர் மாதிரி இல்லை. எல்லா ஜனங்களையும் பகைமை உணர்ச்சியை விடுமாறு செய்யவேண்டியதே நமது முயற்சியாயிருக்கவேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் தன்னிடமுள்ள பகைமை உணர்வை முதன் முதலில் ஒழிக்க முயற்சிக்க வேண்டும்.

மகாத்மா காந்தி எழுதிய

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

தெரிந்து படிக்கிறீரா?

"சமாசாரப் பத்திரிகை என்பது ஒரு பூகோளப்படம் மாதிரி இருக்கிறது" என்று சொல்லுகிறது ஒரு பிரசித்தி பெற்ற பத்திரிகை. அது வாசகர்மேல் ஒரு குற்றமும் சாட்டுகிறது அதற்கு இதை எழுதுபவர் ஜவாப்தாரியல்ல. ஒன்று வாசகர் ஜவாப்தாரியா யிருக்க வேண்டும்; அல்லது அந்தப் பத்திரிகை. ஜவாப்தாரியா யிருக்க வேண்டும். ஆனால், அது பிரசித்தமான பத்திரிகை இனி அது சொல்லும் குற்றத்தைத் தெரிவிக்கலாமல்லவா? பத்திரிகையை எப்படி வாசிப்பதென்றே அநேக வாசகருக்குத் தெரியவில்லையாம். பத்திரிகை என்றால் என்னவென்றே தெரியாததால்தான் இந்தச் சங்கடம் நேருகிறதாம். பத்திரிகையை ஒரு பூகோளப் படத்துக்கு ஒப்பிடலாமாம். அது என்னவோ; அநேக பத்திரிகைக்காரர்கள் 'சொர்க்கப்படம்' மாதிரி பத்திரிகை தயாரிப்பது நமக்கெல்லாம் தெரியும். குறுக்கும் நெடுக்கும் மேலும் கீழும், கார்க்கோடகன், வாசுகி இவை போன்ற பல தலைப்புகளைப் பார்க்கும் போது, சோழிப் பெட்டியை எடுத்து வந்து இரண்டு ஆட்டம் போட்டுவிடலாமா என்று தோன்றி விடுகிறது. அதுபோகட்டும். சமாசாரப் பத்திரிகைகளைப் பற்றி அந்த "கிருஸ்தியன் ஸயின்ஸ் மானிடர்"ப் பத்திகை சொல்லுவதைப் பார்க்கலாம்:

"பத்திரிகைகளுக்கு முதுகெலும்பு போல் முக்கியமானவை செய்திகள் தான். நம்மைச் சூழ உள்ள உலகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்வது மிகவும் அவசியம். செய்திகள் அகப்படுவது தான் மிகவும் கடினமான விஷயம். ஒரு சமாசாரப் பத்திரிகையின் செய்தி இலாகாதான் மிகவும் செலவுவைப்பது.

"செய்திகளைத் தயாரிப்பது பத்திராதிபர்களல்ல. உலகந்தான் தயாரிக்கிறது என்பது நினைவிலிருக்கவேண்டும். செய்திகளைச் சல்லடை போட்டுச் சலித்து, தங்களுக்குப் பிடித்தமானவற்றை ஆசிரியர்கள் பொறுக்கிக் கொள்ளுகிறார்கள் என்பது வாஸ்தவம். ஆனால், இந்த வருஷம் ஹூவரின் பெயர் அடிபடுகிறது; பத்திரிகையின் முதல் பக்கத்தில் தோன்றுகிறார். நாலு வருஷம் ஆசாமி மறைந்தே போகிறார். பிறகு திரும்பவும் காட்சி கொடுக்கிறார். இதெல்லாம் சரித்திரத்தின் லீலை; பத்திராதிபரின் இஷ்டமல்ல

"செய்திகளுக்கும் ஆசிரியர் குறிப்புக்களுக்கும் எவ்வளவு தூரம் தெரியுமா? உலகின் கிழக்கோடியிலுள்ள சீனாவிலிருந்து மேலக் கோடியிலுள்ள அமெரிக்கா எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம். ஒரு பிரபலஸ்தரைப் பற்றியே பத்திரிகையின் ஒரு பக்கம் முழுவதும் செய்திகள் நிறைந்திருக்கலாம்; ஆசிரியர் ஏனையா இதற்கு இவ்வளவு இடங்கொடுத்தார்? அந்தப் பிரபலஸ்தரின் காரியங்கள் மற்ற ஜனங்களுக்கு ரொம்பவும் சம்பந்த முடையவையா யிருக்கலாம், அதனால்தான் இடம் தருகிறார். ஆனால், ஆசிரியர் அபிப்பிராயம் உள்ள பக்கத்தில் பத்து வரியோடு இந்தப் பிரபலஸ்தர் தள்ளிவிடப் படலாம்.

"செய்திகளடங்கிய பக்கம் ஒரு பத்திரிகையின் கண். ஆசிரியர் குறிப்புக்களடங்கிய பக்கம் ஒரு பத்திரிகையின் நாவு. உலகத்தின் காணும் விஷயத்தைப் பற்றி, தான் நினைப்பதென்ன என்பதைச் சொல்லுவது தலையங்கப் பக்கம். இன்னொரு விதமாயும் சொல்லலாம். செய்திப் பக்கம் நமக்கு விஷய ஞானத்தைத் தருகின்றது; தலையங்கப் பக்கம் நமது அறிவைக் கூராக்குகிறது.

"உண்மையைச் சொல்லப்போனால், ஒரு சமாசாரப் பத்திரிகையை மிகப் பயன் தரத்தக்க முறையில் படிப்பது எப்படி என்பதை அநேகர் கொஞ்சம் கூட ஆராய்ந்து அறிந்து கொள்ளவில்லை. இது மிகவும் ஆச்சரியந்தான். சமாசாரப் பத்திரிகை என்றால் என்ன என்பதை ஜனங்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். உணர்ந்துகொள்ளுவார்களானால், பத்திரிகை படிக்கும் வழக்கம் பயனுள்ள முறையில் அபிவிருத்தி யடையும் என்று நமக்குத் தோன்றுகிறது."

கதரையே

அணியுங்கள்

ஆதி சாஸ்திரி

ஆர்க்கிமீடிஸ் சரித்திரம்

"அரசனே, நிற்க மாத்திரம் எனக்கு ஒரு இடம் தேடிக்கொடும். இந்த உலகத்தையே நான் நகர்த்தி வைத்து விடுகிறேன்" என்று சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்தி ஒரு மனிதர் கொஞ்சம்கூடத் தயக்கமின்றித் தைரியமாய்க் கூறினர். அவர் ஆங்கிலேயரல்ல. ஆங்கிலேயர் வனங்களில் திரிந்து, துணி கட்டத் தெரியாத காலத்தில் கிரேக்க நாட்டில் வாழ்ந்த மகான். அவர் பெயர்தான் ஆர்க்கிமீடிஸ் என்பது.

இயந்திரங்களில் திருகுகள் உபயோகமாவதைப் பார்த்திருப்பீர்கள். அதற்கு முடிவில்லாத மரை (எண்ட்லெஸ் ஸ்குரு) என்று பெயர். இதைக் கண்டு பிடித்தவர் ஆர்க்கிமீடிஸ் தான் என்று சொல்லுகிறார்கள். தராசை முதன் முதலில் செய்தவரும் அவர்தானம். தேரை இழுக்க உலுக்கு மரம் போடுகிறார்கள்; ஒரு ஆணியைக் கழற்ற வேண்டுமானல், இடுக்கி கொடுத்து ரெம்பினல், சுலபமாய் வந்து விடுகிறது. இவற்றின் நுட்பத்தை ஆதியில் கண்டு பிடித்தவரும் அவர்தானம்.

ஸிராகூஸ் என்ற தேசத்து மன்னவன் ஹீரோ என்பவருக்கு இவர் உறவினர். ஆர்க்கிமீடிஸினிடம் ஹீரோவுக்கு மிகுந்த அன்பு.

ஆர்க்கிமீடிஸுக்கு முன்னரே பல விஞ்ஞான சாஸ்திரிகள் இருந்திருக்கிறார்கள். என்றாலும், ஆர்க்கிமீடிஸ் பெயர்தான் இன்னும் எந்நாளும் உலகில் ஆதி சாஸ்திரி என்று பிரசித்தியடையும்படி, அவர் இந்த அபூர்வ தத்துவங்களைக் கண்டுபிடித்தார்.

ஆர்க்கிமீடிஸ் கணித பண்டிதர்; வான சாஸ்திரி; விஞ்ஞான ஆராய்ச்சிகளிலேயே சதா சர்வதாக் காலம் கழித்தவர்.

"எப்போது பார்த்தாலும் மேக சஞ்சாரமே செய்து கொண்டிருக்கிறீரே; இந்த மாளாத ஆராய்ச்சிகளை விட்டுக் கொஞ்சம் உலகத்துக்கு உதவியாக ஏதாவது செய்யுமே" என்று சொல்லுவான் ஹீரோ. ஆர்க்கிமீடிஸின் அபூர்வ சக்தியை ஹீரோ நன்றாக விளங்கிக் கொள்ளவில்லை.

எப்பொழுது பார்த்தாலும், கணக்குகள் போடுவார்; பல தத்துவங்களைக் கண்டு பிடிப்பார். பிரத்தியட்ச உலகத்துக்கு உதவியான கருவிகளைச் செய்வதெல்லாம் அவருக்குப் பிடிக்காது.

"எங்கே, நான் நிற்பதற்கு மாத்திரம் வேறோர் இடமிருந்தால், இந்தப் பூவுலகையே அசைத்து விடுவேன்" என்று அப்போதுதான் ஆர்க்கிமீடிஸ் சொன்னர்.

"வாய்ப் பேச்சில் பயனில்லை. ருசு வேண்டும். அவ்வளவு பெரிய பூமியை நகர்த்த வேண்டாம். பெரிய பாரம் எதையாவது, சொற்ப பலத்தைக் கொண்டு நகர்த்திக் காண்பியும் பார்ப்போம்" என்றான் ராஜா.

ஒரு கப்பல் நிறையச் சாமானை நிறைத்தார்கள். அதைக் கடலில் சற்று எட்ட நிறுத்தினர்கள். அநேக வேலைக்காரர்கள் அதை மிகவும் சிரமப்பட்டு இழுத்தார்கள். அதே கப்பல் நிறையச் சாமானை நிறைத்து மறுபடியும் கடலில் நிறுத்தி, சில சக்கரங்களைப் பூட்டி, அவற்றின் மூலம் ஒரு கயிற்றைக் கப்பலில் கட்டி, ஆர்க்கிமீடிஸ் ஒருவராகவே அநாயசமாய்க் கப்பலைக் கரைக்கு இழுத்து விட்டாராம்.

இதைப் பார்த்த அரசன், உபயோகமான இன்னும் பல சாமான்களைச் செய்யும்படி ஆர்க்கிமீடிஸைக் கேட்டுக் கொண்டார்; யுத்த எந்திரங்கள் தயாரிக்கச் சொன்னர். இதெல்லாம், தற்கால பீரங்கிகளும், குண்டு துப்பாக்கிகளும், கண்டு பிடிக்கப்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த சங்கதி என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ராஜாவின் விருப்பப்படி பல எந்திரங்களையும் ஆர்க்கிமீடிஸ் செய்தார். ஆனல், அவர் அவற்றையெல்லாம் துச்சமாய் வெறுத்தார்.

சில சமயம் சாப்பாட்டை மறந்து, ஆராய்ச்சி செய்துகொண் டிருப்பார். நண்பர்கள் நிர்ப்பந்தப்படுத்தி ஆகாரம் ஊட்டுவார்களாம். கருத்துக்களிலும், சித்தாந்தங்களிலும், கணிதத்திலுமே அவருக்கு எப்பொழுதும் நாட்டம். சில சமயம் தெருப் புழுதியை எடுத்து தேகத்திலெல்லாம் கோடு கிழித்து, கணக்குப்போட ஆரம்பித்து விடுவார்.

ஒரு சமயம் ராஜாவுக்கு ஒரு கிரீடம் செய்தார்கள். கிரீடம் தயாரித்த பொற்கொல்லன் தங்கத்தைத் திருடி வெள்ளியைக் கொஞ்சம் கலந்திருப்பானே என்ற சந்தேகம் ஏற்பட்டது. மன்னவன் கிரீடத்தை இவரிடம் கொடுத்துப் பரிட்சிக்கச் சொன்னன். அதை எப்படிக் கண்டு பிடிப்பது என்ற பல யோசனைகளுடன் வாங்கிச் சென்றார். பலவாறு எண்ணமிட்டுக் கொண்டே, தொட்டியில் ஸ்நானம் செய்வதற்காக இறங்கினர். அப்போது தண்ணீர் தொட்டியினின்றும் வழிந்து வெளியே ததும்பியது. உடனே ஆர்க்கிமீடிஸ் "யூரிக்கா! யூரிக்கா!" என்று கத்திக்கொண்டே, தான் நிர்வாணமாயிருப்பதையும் கவனிக்காமல், தெருவிலே ஓடி வந்து விட்டார்.

'யூரிக்கா' என்ற கிரேக்க வார்த்தைக்குக் 'கண்டு பிடித்தேன்' என்று அர்த்தம். ஒரு சேர் தங்கத்தைத் தண்ணீரில் போட்டால், அதனல் விலகி யொதுங்கும் ஜலம் ஒரு அளவாயிருக்கும்; ஒரு சேர் வெள்ளியைத் தண்ணீரில் போட்டால், அதனல் ஒதுங்கும் ஜலம் வேறு அளவாயிருக்கும். இந்த மாதிரியே மற்ற உலோகங்களும். இந்த உண்மை அவருக்குப் புலப்பட்டு விட்டது. இந்தச் சந்தோஷத்தில் அவர் தன்னை மறந்துபோய் விட்டார்.

ஹீரோ இறந்து விட்டார். அதன் பின்னர் ஸிராகூஸ் அரசாங்கம் ரோமாபுரி அரசாங்கத்தோடு யுத்தம் புரிந்தது. ஆர்க்கிமீடிஸ் அந்த யுத்

தத்தில் கலந்து கொண்டார். தமது யுத்த எந்திரங்களைக் கொண்டு எதிரியை முறியடித்து விட்டார். ரோமாபுரி அரசன் பின் வாங்கிவிட்டான். எதிரியைத் துரத்திய பிறகு ஆர்க்கிமீடிஸ் பழையபடி தமது கணக்குகளில் ஆழ்ந்துவிட்டார். ஆனல், பின்வாங்கிய ரோமாபுரி மன்னவன், சூழ்ச்சியாக ஸிராகூஸ் நகருக்குள் சேனையோடு புகுந்துவிட்டான். "ஆர்க்கிமீடிஸுக்கு மாத்திரம் ஒன்றும் தீங்கு செய்யாதீர்கள்" என்று அவன் தன் துருப்புகளுக்குக் கட்டளை யிட்டிருந்தான்.

ஆர்க்கிமீடிஸ் தமது அறைக்குள் உட்கார்ந்திருந்தார். அவருக்கு எதிரே மணல் பரப்பிக்கிடந்தது. அதில் குறுக்கும் நெடுக்குமாகப் பல கோடுகளைக் கிழித்து, என்னவோ கணக்குப்போட்டு, யோசித்துக்கொண்டிருந்தார். ரோமாபுரி வீரனொருவன் வாளுடன் உள்ளே நுழைந்தான். அவனுக்கு இவர் யார் என்பது தெரியாது. வாளை ஓங்கிக்கொண்டு, அந்த மூட வீரன் இவரை நெருங்கினன். இவருக்குக் கணக்கைப் பற்றியே கவலை. "இந்தா அப்பா. இந்தக் கோட்டில் காலை வைத்து விடாதே" என்ருர் ஆர்க்கிமீடிஸ். ஆனல், அந்த முட்டாள், இவரைக் கொன்றுவிட்டான். இப்படி வீர மரண மடைந்தார் ஆர்க்கிமீடிஸ்

ரோமாபுரி மன்னவன் பெருந்துக்க மடைந்தான். அந்த முட்டாள் வீரனைப் பெரிதும் நொந்து கொண்டான். என்ன செய்து என்ன பயன்? அந்த மகான் இம்மண்ணுலகத்தைத் துறந்து, பொன்றுப் புகழ் என்னும் வானுலகை எட்டிவிட்டார்.

அசல் வெண்ணை உருக்கிய நெய்யும், வெண்ணையும்

வெண்ணை வீசை 1க்கு ரூ. 1-6-0
நெய் ,, ரூ. 2-0-0

இவ்விடத்தில் கிடைக்கும்.

கோயம்புத்தூர் நெய் டிப்போ,

நெ. 12, கிழக்குமாட வீதி,
மைலாப்பூர்.

அரட்டைச் சுப்பன்

(குஞ்சு)

'அவன் என்ன, வெறும் வாயரட்டல்' என்று வெகு லேசாகச் சொல்லிவிடுகிருர்கள், ஏதோ கிள்ளுக்கீரை மாதிரி, 'தலைவலியும் காச்சலும் தனக்கு வந்தாலல்லவா தெரியும்', இவர்கள் தான் கொஞ்சம் அரட்டையடித்துப் பார்க்கட்டுமே, அப்போதல்லவா அதன் கஷ்டம் விளங்கும், அரட்டை அடிப்பது போல் அவ்வளவு கஷ்டமான வித்தை நான் வேறொன்றும் கண்டதில்லை.

ஒரு தனியறைக்குள்ளே, எலக்டிரிக் விசிறிக்குக் கீழ், சுகமாக ஈஸிச் சேரில் சாய்ந்து கொண்டு, சாவகாசமாய் யோசித்து, அடித்தடித்து எழுதுவது ஒரு பெரிய பிரமாதமில்லை. ஆனல் ஏழெட்டுப் பேர்களிடையே, கணங்கணம் புதிது புதிதாய், விசித்திர விசித்திரமாய் ஏதாவது சொல்லிக் கொண்டே போவதென்ருல்—இடையே கொஞ்சம் வாய்தவறி உளறினலும் போச்சு, அப்புறம் ஒரே கேலிதான்—இது ஹிமாலயத்தைப் போல் பதினயிரமடங்கு பெரிய கஷ்டம் என்பதில் ஐயமுண்டோ?

அரட்டை அடிக்கத் தெரியாத மௌன ஸ்வாமிகள் நால்வர் கூடிவிட்டார்களானல், அப்பப்பா, அந்தக் கண்றுவியைப் பரமசிவன்தான் பந்தலேறிப் பார்க்க வேண்டும். 'இன்று ஏது எல்லாம் மௌனமாய் இருக்கிறது, ராமா நீதான் ஏதாவது பேசேன்' என்பான் கிருஷ்ணன். 'என், உன் வாயில் கொழக் கட்டையோ?' என்பான் ராமன். இந்தக் குத்தல், சொருகல், தூண்டல், வேண்டல் முதலிய குரங்கு சேஷ்டைகள் அரைமணி நேரமாவது நடந்த பிறகுதான் 'என்னத்தைப் பேசறது, சொரக்காய்க்கு உப்பில்லேன்னு' என்று ஒருவர் திருவாய் மலர்வார். இந்தக் கோஷ்டியார் அரட்டை ஆரம்பிப்பதற்குள் உமக்கு அரட்டையிலுள்ள ஆசை அரைவாசியாவது குறைய வில்லை என்ருல் அது உம்முடைய அதிர்ஷ்டம்.

இந்தக் கோஷ்டியின் இச்சங்கடமான நிலையிலே ஒரு அரட்டைச் சுப்பன் வந்து விட்டால் போதும், அவ்வளவு தான், எலக்டிரிக் பட்டனை அமுத்தினற்போல், பளிச்சுப் பளிச்சென்று அரட்டைக் குவியல்கள் பொங்கிக் கொட்டும். ஆனந்த விலாஸின் ஆமவடை முதல் பார்லெமெண்டரி கமிட்டி வைட் பேபர் வரை அவனுக்குத் தெரியாத தொன்றில்லை. வரும்போதே அடுத்த வீட்டு அம்மாக்கண்ணியை அவள் ஆம்படையான் அடித்ததோ, அல்லது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சுயராஜ்யத் திட்டமோ அவனுடைய நாக்கில் தாண்டவமாடும். அவன் சமய சஞ்சீவி, இடம், பொருள், ஏவல் மூன்றும் கவனித்து எப்படியெப்படிப் பேச வேண்டுமோ அப்படியப்படிப் பேசுவான்.

பேச்சிலே சில நகாஸ் வேலைகள் உண்டு, அங்கங்கே கொஞ்சம் பொடி வைத்துப் பேச வேண்டும். ஒருவர் பேசும்போது மற்ருெருவர் இடையே பிரசங்கம் செய்யக் கூடாது. வாதம் செய்வதற்கும் அரட்டைக்கும் வெகு தூரம் அரட்டை மேடையில் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொள்ள உரிமை யுண்டே ஒழிய அவைகளை வற்புறுத்துவது தப்பிதம். முக்காலும் அரட்டைகள் எங்கோ ஆரம்பித்து எங்கோ போய் முடியும். எனினும் 'நல்ல அரட்டை என்பதில் விடுதியா யிருக்கும் பல விஷயங்களிடையே கோர்வையான ஒரு சரடு ஓடும்' என்று ஒரு ஆங்கில ஆசிரியன் சொல்லுகிருன். பெரும்பாலும் நமது நாட்டில் வெட்டி அரட்டைகள் அதிகமாய் இருக்கின்றன. விஷயம் நிரம்பிய அரட்டைகள் வெகு கொஞ்சம். எப்படியாயினும் அரட்டை யடிக்கத் தெரியாத அசமஞ்சங்களுக்கு வீண் வார்த்தைக்காரன் கூட எவ்வளவோ மேல் என்று நான் நினைக்கின்றேன்.

சில பேர்கள் அரட்டையிலே தங்களுடைய தொண்டையின் சக்தியைப் பரிபூரணமாகக் காட்டி விடுகிருர்கள். எட்டுப் பேர்களிடையே எண்பதினயிரம் பேருக்குப் பிரசங்கம் செய்வதுபோல் பேசவேண்டியது அநாவசியம் மட்டுமல்ல, அருவருப்பாகவும் கூடப் போய் விடும். சிலருக்குக் கீச்சுக்குரல், கிணற்

‘பூலோக சொர்க்கம்’

(காந்தி தத்துவத்தைப் பற்றி ஒரு ஐரோப்பியர்)

[டுகோல்டு ஸெம்பிள் என்பவர் ஸ்காட்லாந்துக்காரர். எளிய வாழ்க்கைப் பரிட்சையிலிறங்கி உலகப் பிரசித்தி யடைந்தவர். ஆரோக்கியம், சுதந்திரம், இயற்கை வாழ்வு என்பன இவருடைய உபதேசங்கள். இவர் சில நூல்கள் எழுதியிருக்கிறார். மிகவும் சமீபத்தில் “ஒரு சுதந்திர புருஷனின் வேதாந்தம்” என்றோர் புத்தகம் எழுதியிருக்கிறார். காந்திஜீயைப் பற்றி அதில் இவர் சொல்லியிருக்கும் சில விஷயங்களின் மொழிபெயர்ப்பைக் கீழே படியுங்கள்.]

நான் லண்டன் மரக்கரி போஜனச் சங்கத்தின் காரியதரிசியா யிருந்த போதுதான் முதன் முதல் காந்தியைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அச்சங்கத்தில் அவரும் ஒரு உறுப்பினர்; உற்சாகமாய் உழைத்தவர். அவருடன் கடிதப் போக்கு வரத்து நடத்தினேன். டால்ஸ்டாயிடம் பெரிய மதிப்புடையவர் என்பதை அதன்மூலம் கண்டு கொண்டேன். அது முதல் காந்தி செய்வதை யெல்லாம் மிகுந்த சிரத்தையுடன் கவனித்து வருகிறேன். சென்ற அநேக வருஷங்களாக, அவருடைய ‘யங் இந்தியா’ப் பத்திரிகையைப் படித்து வருகிறேன். மகாத்மாவின் மிகச் சிறந்த எழுத்துக்கள் அந்தச் சின்னஞ்சிறிய வாரப் பத்திரிகையில் காணப்படுகின்றன. அவருடைய வியாசங்கள் எனக்கு எப்பொழுதும் பெருந் தூண்டு கோலா யிருந்து வந்திருக்கின்றன.

என்றாலும், இந்த மகானை நேரே தரிசிக்கும் அபூர்வ பாக்கியம் எனக்குக் கிடைக்குமென்று நான் நினைத்ததே யில்லை. சமீபத்தில் இங்கிலாந்துக்கு விஜயம் செய்தபோது எனக்கு இந்தப் பாக்கியம் கிடைத்தது. அவரிடம் அநேக விஷயங்களைப் பற்றிப் பேசினேன். காந்தி சிறிதுகூடச் சூதுவாதில்லாத உண்மையாளர்; சகலவித ஜனங்களிடமும் மரியாதையாக நடந்து கொள்ளுகிறார்.

ஒரு நாள் ஒரு சிறிய சம்பவம் நடந்தது. காந்தி எவ்வளவு தூரம் தமது திடமான கொள்கைக்கு உண்மையாக நடந்துகொள்ளுகிறார் என்பதை அந்தச் சம்பவம் காட்டிற்று. ரேடியோக் காரர்கள் ஒரு கூட்டமாக வந்தார்கள். தயவு செய்து ரேடியோவில் அமெரிக்காவுக்கு ஒரு சிறிய பிரசங்கம் செய்ய வேண்டுமென்று அவர்கள் வேண்டிக் கொண்டார்கள். அதைக் கவனமாய்க் கேட்ட காந்தி, மரியாதையாக “முடியாது” என்று பதிலளித்து விட்டார். காந்தி பிரசங்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தைப்பற்றி அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் நீண்ட நேரம் வாதம் செய்தார். “இதைப்பற்றி வாதப் பிரதி வாதத்தில் என்னை யிழுக்காதீர்கள்” என்று ஒரே பதிலாய்ச் சொல்லிவிட்டார் மகாத்மா.

அந்தப் பிரசங்கம் செய்ய மகாத்மாவின் மனச் சாட்சி இடங்கொடுக்கவில்லை. இந்த ரேடியோ வியாபாரத்தைப் பற்றியும் அவர் நன்றாய்த் தெரிந்துகொள்ள வில்லை. இந்தியாவிலுள்ள அடிமைப்பட்ட ஏழை ஜனங்களுக்கு உதவி புரிவதற்காகவே அவர் இங்கிலாந்துக்கு வந்தார்; தம்மைப்பற்றி விளம்பரம் செய்து கொள்ளுவதற்காக வர வில்லை. காந்தி உண்மையில் எப்பேர்ப்பட்டவர் என்பதை இதனின்றும் நான் கண்டு கொண்டேன். தப்பும் தவறுமான தகவல்களைப் பெற்ற நமது சில பத்திரிகைகள் காந்தி பம்பாய் வர்த்தகரின் தூதர் என்றும், சதா சர்வதாத் தம்மை விளம்பரம் செய்து கொள்ளுவதிலேயே ஆசையுடையவர் என்றும் சொல்லி வந்தன. காந்தி இப்படிப்பட்டவரல்ல என்பதை இதிலிருந்தும் தெரிந்துகொண்டேன்.

கதர், நூல் நூற்றல், எளிய வாழ்க்கை இவற்றைக் காந்தி உபதேசித்து வருகிறார். அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்த மகத்தான (இந்திய) தேசத்துக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதாரத் துன்பத்தைத் தீர்த்து, ஆட்சிமுறையின் சீர்கேட்டை இறுதியில் வென்று திருத்தப்போவது காந்தியின் இந்த உபதேசந்தான் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

ஒழுங்கான வாழ்க்கை வாழ்வதற்குரிய தத்துவங்கள் உலகம் பூராவுக்கும் ஒரே மாதிரியானவைதான். இதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகையால், எந்த ஜனங்களே யாயினும், ஆத்ம எழுச்சியுடன் உண்மைக்குப் பக்தி செலுத்தும் சத்தியாக்கிரகத்தி லிறங்கி, தங்கள் வாழ்க்கையில் புலனடக்கமான பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டித்து, தங்கள் செயல் யாவற்றிலும் அஹிம்சா தர்மத்தை ஆசரிக்கின்றார்களோ அந்த ஜனங்கள், ஆத்மானந்தத்தையே அனுபவிப்பார்கள்; காலக்கிரமத்தில், பூலோக சொர்க்கம்போன்ற நிலைமை உண்மையிலேயே நிச்சயமாய் அவர்களால் ஸ்தாபிதமாகிவிடும்.

றிலிருந்து பேசுவது போலிருக்கும், இவர்கள் ரகஸியம் கூற லாயக்கானவர்களே ஒழிய அரட்டைக்கும் இவர்களுக்கும் வெகு தூரம். சாதாரணமான குரலில், சமயோசிதமான, வீட்டுப் பாஷையில், சொல்லும் விஷயங்களை விநோதமான முறையில் சொல்வதற்குத் தான் அரட்டை எனப் பெயர். இதில் மற்றவர்களுக்கும் இடங் கொடுத்துப் பேச வேண்டும். நிற்க,

ஹாஸ்யப் பத்திராதிபர்களுக்கு ஒரு வார்த்தை. உங்களுக்கு உண்மையான, உயர்ந்த, உல்லாசமான, திடீர் விகடங்கள் வேண்டுமானால் காசு கொடுக்காமல் அவைகளை ஆயிரக் கணக்கில் பெறும் வகையை நான் சொல்லிக் கொடுக்கிறேன். எனக்கு எவ்வளவு டிஸ்கவுண்டு என்பதை முதலிலே சொல்லி விடுங்கள். நீங்களோ, அல்லது உமது நிருபரோ சென்னைக் கடற்கரைக்கோ, அல்லது எங்களூர் ஆற்று மணலுக்கோ அந்தி வேளைகளில் தவறாமல் விஜயம் செய்து, அங்கு நடைபெறும் அரட்டைக் கச்சேரிகளை அட்சரம் விடாமல் குறித்துக் கொள்ளுங்கள். சுண்டைக்காய் முதல் சுயராஜ்யம் வரை அவற்றில் ஹாஸ்யம் ததும்பா விட்டால் என்னைக் கேளுங்கள்.

வ. வே. சு. அய்யர் எழுதிய

குருகோவிந்த சிங்கன்

தபாற்கூலி யுள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை

திருவல்லிக்கேணி, சென்னை.

உஷையின் கனவு

(கு. ப. ராஜகோபாலன்)

[கிழக்கே, உதய பர்வதத்தின் மேலண்டைச் சாரல். நக்ஷத்திரங்கள் என்ற லஸ்தர்கள் தொங்கும் இரவின் இருள் மாளிகையில் காலக்குமரி, உஷை, தூங்குகிறாள். பொழுது புலர்வதற்கு முந்திய இருட்டு. நிசை (ராத்ரி) அவளைத் தட்டி எழுப்புகிறாள்.]

நிசை.—உஷே! எழுந்திரு, நேரமாகி விட்டது. நக்ஷத்திரங்கள் கூட அவிந்துபோகிற சமயம்.

உஷை.—(எழுந்து உட்கார்ந்து) என்னை என் எழுப்பினாய்?

நிசை.—ஏன்?

உஷை.—இப்பொழுது என் பக்கத்திற் படுத்திருந்த நிழல்—அல்ல, உருவம்தான்!—எங்கே?

நிசை.—என்ன, தூக்கக் கலக்கமா?

உஷை.—தூங்கினேன், வாஸ்தவம் ஆனால் நான் கண்டது கனவல்ல.

நிசை.—அதெப்படிச் சொல்கிறாய்?

உஷை.—அவ்வுடலின் உணர்ச்சி இன்னும் என்மேலிருக்கிறது.

நிசை.—யார் அது?

உஷை.—யார் அது, சொல்லேன்! எங்கு மறைந்தனன்?

நிசை.—சித்தப்பிரமையா?

உஷை.--ஒருவேளை, இரவின் இருள் உருவமோ? இல்லையே, ஜ்யோதிர் தேவதைபோல இருந்தனனே!

நிசை.—பின் யார்?

உஷை.—என் பாவத்தைக் கொட்டிக்கொள்ள வந்த தேவதையோ? ஒருவேளை நித்திரையே, உன் சேஷ்டைதானோ இது? நினைவின் எத்தகைய நிழல் திரைகளின் பின்னிருந்து இவ்வுருவம் வான வடிவெடுத்து வந்தது? என் மனமேடையில் தோன்றி மறைய?........இல்லை, நிஜமான ரூபம்தானடி. ஏனென்கிறாயோ, தித்திக்கிற தென்று அவன் துதித்து என் வாயின்மேல் மோன முத்திரை போட்ட ஒவ்வொரு தாமும் இடையிடையே என் காதில் காதல் மொழிகளைக் கொட்டினான். அவைகளின் ஒலியலை இன்னும் என்னுள் பரவிச்சென்று கொண்டிருக்கிறது, கல்பட்ட ஏரியில் அலைத்திரள் போல. அது என் மனதின் ஏமாற்றமாயிருக்குமா என்ன?

நிசை.—முடியாதுதான். கோபத்துடன் இங்கு வந்திருக்கவேண்டும்.

உஷை.—பிசகு! இவ்வேளையில் என் கன்னிமாடத்தில் நுழைய எவனுக்கு முடியும். முடியாது. உபயோகமற்ற ஸ்வப்னம்தானடி.

நிசை.—அப்படித்தானிருக்கவேண்டும்.

உஷை.—போடி, என்னைக் கனிவுறச் செய்த அவனுடைய காதலுறுதிகள் இன்னும் என் நாடிகளில் ஜீவரஸம்போல ஓடித் துடிக்கின்றனவே! வாஸ்தவமில்லாது போனால் என் மனமா அவ்வளவு கற்பிக்கும்?

நிசை.—கற்பிக்கும்!

உஷை.—அவ்வழியில் நான் என் மனதைச் செலுத்தவில்லையே! மேலும் கற்பனையானது கனவில் சிதைவுண்டல்லவோ தோன்று மென்பார்கள்? இது கற்பனையல்ல!......அடி! திசை மன்னரையும் திரஸ்கரித்த என் புருவச் செருக்கைச் சீரழித்து விட்டானே, பாவி! ஒரே அடியில் என் மனதையும், மானத்தையும் அழித்து விட்டானே! என் உடலும்கூட உருகிவிடும்போலிருக்கிறதே!

நிசை.—அவன் எப்படி இருந்தான்?

உஷை.—அவ்வுருவை எப்படி வர்ணிப்பேன்! என்னால் முடியாது. இணைசொல்ல முடிந்தால்தானே!

நிசை.—நான் ஒரு படம் காட்டுகிறேன். பார்த்துச் சொல் (இரவு மறைந்து அருணோதயம்.)

உஷை.—என்னடி, ஒன்றும் காணவில்லையே...எங்கே? இதோ கிழக்கே தெரியும்—ஆ, இவன்தானடி என் மன்மதன், அநிருத்தன்! தடையற்றவன்! அதனால்தான் என்னுள் ஊடுருவிப் பாய்ந்துவிட்டான். ஸூர்யா! நான் அயர்ந்து தூங்கும்பொழுது என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்ட கள்வா, என் முன்தோன்று! என் காதற் சிலையே, என் கண்முன் வா! கனவுருவுடன் என்னைக் கைதிசெய்த கணவா, நான் உன் அடிமை! உன் ஒளி உடலைப் பார்க்க என் கண்கள் கூசுகின்றன உன் கிரணங்களால் என்னை அணைத்து உன்னுள் மறைத்துக்கொள்! ஆ, அப்படித்தான்!

(உஷத்காலம் வெளியேறி ஸூர்யோதய மாகிறது.)

ராம், மோஹனுடைய

வட இந்தியா யாத்ரா ஸ்பேஷல்

1934-ம் வருஷம் ஜூலை௴ 30௳

சென்னையைவிட்டுப் புறப்படும்

கீழ்க்கண்ட இடங்களுக்குப் போகும் கால விவரம்.

31	துங்கபத்ரை.
ஆகஸ்ட்	
1, 2	பண்டர் பூர்.
3, 4	நாசிக் (பஞ்சவடி த்ரயம்பகம்)
5, 6, 7,	பம்பாய்.
8	ப்ரோச் (நர்மதை).
9	பரோடா.
10	டாகோர் (ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம்.
11	உஜ்ஜயினி (அவந்திகா).
12, 13	அஜ்மீர் (புஷ்கரம்).
14	ஜெயப்பூர்.
15	ஆக்ரா.
16, 17	மதுரா, பிருந்தாவனம், கோகுலம், கோவர்த்தனம்.
18, 19	டெல்லி.
20	குருக்ஷேத்திரம்.
21,22,23,24	ஹரித்வார், ரிஷிகேஷ்.
25	அயோத்தி, நந்திகிராமம்.
26, 27	பிரயாகை (திருவேணி, அலஹாபாத்.)
28,29,30,31, செப்டம்பர் 1	ஸ்ரீ காசி.
2, 3	கயா.
4, 5, 6	கல்கத்தா.
7, 8	பூரி, ஜெகன்னாத்
9	சிம்மாசலம்
10	ராஜமஹேந்திரம் (கோதாவரி).

செப்டம்பர் 11௳

மதராசுக்குத் திரும்பி வரும்.

சார்ஜ்கள் :—

மூன்றாவது வகுப்பு ரூ. 95

இரண்டாவது வகுப்பு ,, 235

மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

ராம் மோஹன் கம்பெனி,

21, செகண்டு லைன் பீச்சு, மதராஸ்.

குளத்தங்கரைக் குயில்கள்

(பாலபாரதி)

அழகிய குளம், மாசு மறுவற்றுத் தெளிந்த ஜலம், உருக்கி விட்ட வெள்ளிக் கம்பிபோல் சிலிர்க்கும் அலைவரிகள், குளுகுளுக் காற்று, குளத்தில் தாமரையும், அல்லியும் ஏராளம், தாமரைகளில் வண்டுகள் பாடுகின்றன, சுற்றிலும் பளிங்குப் படிக்கட்டு, நாற்புறமும் சோலைகள், சோலைகளில் ரோஜா மலர் சூரிய காந்தியை முத்தமிடுகிறது, மல்லியும், முல்லையும் நாணத்தால் குவிந்துள்ளன, பறவைகள் ஒன்றோடொன்று கொஞ்சிக் குலாவுகின்றன.

அன்று குளத்தங்கரைக் குயிலனுக்கும், குயிலிக்கும் 'கண்ணாலம்.' குயிலனுக்கு வயது எட்டு, குயிலிக்கு வயது ஏழு, சின்னப்போது முதற்கொண்டே இருவரும் இணைபிரியாத 'ஜோடிகள்.' அதிகாலையிலேயே குளத்தில் குளித்துவிட்டுத் தலையில் ரோஜா இதழ்க் கிரீடமும், கழுத்தில் தும்பைப் பூக்காரையும், காதுகளில் சின்னஞ் சிறிய பூவரசன் தோடுகளும், காலில் மஞ்சட்பூக் கொலுசும் பூண்டவளாய்க் குயிலி பரம சௌந்தர்யத்தோடு விளங்கினாள். குயிலனும் மூங்கிலின் வெள்ளாடை புனைந்து, காலில் குண்டு மணியாற் செய்த தண்டையோடு கல்யாணத்திற்குத் தயாரானான். காலை எட்டு மணிக்கு முகூர்த்தம்.

மணமக்களுக்கு எருக்கம்பூப் பஞ்சியினால் வண்டுகள் சாமரை வீசின. நீல வர்ணப் பட்டுப் பூச்சிகள் ஒவ்வொரு மலர் வீட்டுக்கும் சென்று மகரந்தப் பொற்காசுகள் சேகரித்து வந்தன. குருவிகள் தான்யாதிகளைக் கொத்திக் கொண்டு வந்து குவித்தன. காக்கைக் கூட்டமொன்று ஒரு மிட்டாய்க் கடையை அப்படியே 'அபேஸ்' செய்து கொண்டு வந்து இங்கு கடை பரப்பி விட்டது. வானம்பாடிச் சிறுமிகள் ஊரழைக்கப் போயிருந்தன.

கண்ணாலம் ஆரம்பமாயிற்று. குளத்தங்கரை ஆல மரத்தின் உச்சிக் கிளையிலே, ஐந்து தாமரை மலர்கள் கவிழ்த்திய சிகரத்தின்கீழ் தம்பதிகள் வீற்றிருக்கின்றனர். கிழப் புரோகிதக் காக்கையொன்று பட்சி பாஷையில் மந்திரம் கூறுகிறது. கக்கக்கா என்றால் கடவுளாம், கிக்கிக்கீ என்றால் கிளி வாஹனனாகிய மன்மதனும், குக்குக்கூ என்றால் குயிலாம். 'கடவுளும், மன்மதனும், குயில் தம்பதிகளைக் காப்பாராக' என்ற பல்லவி அடிக்கடி எல்லோராலும் பாடப்பட்டது

அச்சமயத்தில் வனதேவதைசள் வந்து இறங்கினர். ஆ! எவ்வளவு சௌந்தர்யம்! சின்னஞ் சிறு கன்னிகைகள், இறக்கை பெற்ற அல்லி மலர்கள், ஆவியாற் செய்த அன்னப் பேடுகள், மின்னலை வடித்த மின்னரசிகள். அவர்கள் பாட ஆரம்பித்தனர், பாட்டாவது பாட்டு, இசை விசிறி கொண்டு கான மழையைச் சலசலத்த அமுத தாரை. தம்பதிகளைச் சுற்றித் தேவதைகள் கூத்தாடினர்; சமுத்திர அலையின் மீது சந்திரனொளி கூத்தாடுவதுபோல். எல்லோருடைய, ஏன் எல்லா வஸ்துக்களுடைய பார்வையும் இவ்வானந்தக் கூத்தில் சொக்கிப் போய்ச் சொருகி விட்டது.

அப்போது அவர்களுள் தலைவியாகிய 'மதன மணி' என்னும் வனதேவதை கூறினாள். 'தோழிகளே, குயிலனும், குயிலியும் என்றும் இளைஞராய், எப்போதும் அழியாத இன்பமும், அன்பும் நிறைந்து விளங்கவேண்டும் என்று நான் ஆசீர்வதிக்கிறேன்'. அதனை வீணைக்குரலில் மற்றவர்களும் ஆமோதித்தனர்.

அடுத்த கணத்தில் வனதேவதைகள் மறைந்துவிட்டன. குயிலனும், குயிலியும் ஒருவரை ஒருவர் தழுவி முத்தமிட்டுக் கொண்டனர். கண்ணாலம் முடிந்தது.

* * *

ஒரு வாரம் கழிந்தது. துன்பக் கலப்பற்ற இன்ப உலகத்திலே ஒரு வாரம் ஒரு கணமாய்ப் புது தம்பதிகளுக்குத் தோன்றியது. அவ்வனத்தில் அவர்கள் நடமாடாத சந்து பொந்து ஒன்றுமே கிடையாது, விளையாடாத விளையாட்டில்லை, அனுபவிக்காத இன்பம் இனித்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த சமயத்தில் வேற்று வனத்திற்குத் தன் மகளைக் காண்பதற்காகச் சென்றிருந்த 'கொள்ளிக் கண்ணி' என்ற கொடிய வனதேவதை திரும்பி வந்தாள். தான் இல்லாத சமயத்தில் குயிலனும், குயிலியும் கண்ணாலம் செய்துகொண்டதைக் கேட்டு ரௌத்ராகாரமான கோபமடைந்தாள். அவளுடைய கண்ணில் நெருப்புக் குமுறியது, மூச்சில் வெப்பம் கக்கியது, பறவைகளெல்லாம் பயந்தோடின.

'ஆ! இவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டதா? நான் ஒரு கிழவி இருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்த்தார்களா? நான் வந்த பிறகு கல்யாணம் செய்தாலென்ன, குடி முழுகியா போய்விடும். இருக்கட்டும், அவர்கள் வாழ்வதை ஒரு கை பார்க்கிறேன்' என்று கர்ஜித்தாள்.

குயிலனும் குயிலியும் அதே ஆல மரத்தின் கிளையில் உட்கார்ந்து ஒருவருக்கொருவர் கதை சொல்லிக் கொண்டிருந்தனர். அவ்விடத்திற்கு இக்கொடுங் கூனி கொள்ளிக்கண்ணி போய்ச் சேர்ந்தாள், தம்பதிகளை ஆசை தீர மனம் போனபடி திட்டினாள். அவர்கள் நடுநடுங்கிப் போய்விட்டனர், எவ்வளவு தூரமோ சமாதானம் செய்து பார்த்தனர், கிழவி அடங்குவதாகக் காணோம். கடைசியில் குயிலனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'அடி துஷ்டை! நீ இங்கிருந்து கத்தாதே. உனக்கு இஷ்டமானபடி செய்து கொள்' என்று எரிச்சலோடு கூறினான்.

அவ்வளவுதான், அக்னிக் கடலொன்று கொந்தளிப்பது போல் கிழவி ஆகாசத்துக்கும் மண்ணுக்குமாகத் தாண்டித் தாண்டிக் குதித்தாள். ஆ! ஆ! என்று உறுமினாள். கோபத்தோடு, 'உங்கள் கண்ணவிய' என்று குயில் தம்பதிகளுக்குச் சாபம் போட்டாள்.

குயில் தம்பதிகள் குருடாயின. ஆனால் ஆச்சரியம்; வனம் முழுவதும் இருண்டுவிட்டது. பறவைகளெல்லாம் திசை யறியாது தடுமாறின. ஏனெனில் வெளியிலுள்ள ஒளியெல்லாம் குயில் காதலர்களின் உள்ளத்தில் ஒடுங்கிவிட்டது. குயிலியும், குயிலனும் ஒருவருக்கொருவர் கட்டித் தழுவிப் பிணைந்து கொண்டனர்.

கிழவிக்கு கோபாவேசத்தில் தன்னைச் சுற்றி யுண்டான மாறுதல் தெரியவில்லை. கண்ணவிந்த பிறகும் குயிலனும் குயிலியும் கட்டித் தழுவியதைப் பார்த்துவிட்டாள். அவ்வளவுதான், 'உங்கள் இறகுகள் சக்தியற்றுப் போக' என்று மறுபடியும் சாபமிட்டாள்.

குயில்களுக்கு நகரவுங்கூட முடியவில்லை. ஆனல் வலிமைமத் தேவனுகிய காற்று அவ்வனத்தை விட்டு நீங்கி விட்டான். எல்லாவிதமான அசைவுகளும் தீர்ந்து போயின. ஒரேயொரு அசைவற்ற உறக்கம் வனத்தைப் பீடித்தது. குளத்து ஜலங்கூடப் பனிக்கட்டிபோல் உறைந்து போயிற்று. குயில்கள் மட்டும் ஒன்றையொன்று அணைத்தவாறே கூடிக் கலந்தன.

கிழவிக்குக் கோபம் தாங்க முடியவில்லை. 'உடல் புழுக்க' என்று மூன்றும் முறை சாபம் போட்டாள். அவ்வளவுதான் குயில்களின் உடலில் சீழ் வடிய ஆரம்பித்தது. ஆனல் ஆச்சரியம், வனம் முழுவதும் புழுக்கள் நெளிந்தன. அப்போதுதான் கிழவிக்கு உண்மை தெரிந்தது. 'இதென்ன உற்பாதம்' என்று பயங்கினள்.

* * *

இங்கு நடப்பவைகளை யெல்லாம் தன்னுடைய வாகனமாகிய கிளி சொல்ல அறிந்த மதனதேவன் தன் உபாசகர்களுக்கு வந்த கதியைக் கேட்டுக் கோபமுற்றுன் உடனே தென்றல் தேரில் ஏறி இவ்வனத்திற்கு விஜயம் செய்தான்.

எங்கும் இருளாயிருந்தது. வன முழுவதும் புழுக் கூட்டம். தென்றற் பரி தடைப்பட்டது. அப்போது கிளி சொல்லுகிறது: 'எஜமானே! அக்கொள்ளிக்கண்ணி குயில்களின் இறக்கைகளை ஒடித்ததனல், அசைவு தேவனுகிய காற்று வெளியே போய் விட்டான். வனத்தின் அழகும், ஒளியும் காதலர்களின் உள்ளத்தில் புகுந்துவிட்டன'.

மதனத்தேவன் உடனே ரதத்தை விட்டு இறங்கிக் கால் நடையாகவே அவ்வனத்துள் புகுந்தான். அவனைச் சுற்றி மட்டும் ஒரு வெண் பொன்னொளி வீசிக்கொண்டிருந்தது. சாதாரணமாய்ச் சாந்தமான அவனது முகம் அப்போது கோபத்தால் சிவந்திருந்தது. கண் பார்வையில் மின்னல் வெட்டியது. கொள்ளிக்கண்ணியின் முன் மதனன் வந்துவிட்டான்.

கொள்ளிக்கண்ணியும் காதற்தேவனைக் கண்டுவிட்டாள். அவளுடைய தேகம் நகசிக பரியந்தம் பயத்தால் நடுங்கியது. ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்று அவளுக்குத் தெரியும்.

மதனனது கம்பீரமான குரல் பேசலாயிற்று. 'ஹே! கொள்ளிக்கண்ணியே! என்னுடைய உபாசகர்களது ஜோலிக்குப் போவதில்லை என்று நீ சத்தியம் செய்து கொடுத்தது நினைவிருக்கிறதா? பாவம், கள்ளங்கபடறியாத இச்சின்னக் குயிற் குஞ்சுகள் மேலா உனது கோபத்தைக் காட்ட வேண்டும். அப்படித்தான் காட்டினையே, உண்மையான காதலை, உயிரோடு உயிர் கலந்த அன்புக் கடலை உன்னல் அழித்துவிட முடியுமா? அடி பேதையே! காதல்தானே இவ்வுலகத்தை யெல்லாம் ஆட்டி வைக்கிறது. காற்றும், ஒளியும், அழகும் எல்லாம் காதலின் விரிவே யல்லாது வேறென்ன? காதல் போய்விட்டால் உலகமும் அன்றே அழிந்து போய் விடும். உன்னுடைய கோபத்தின் பயனைப் பார்த்தாயா? இவ்வழகான வனம் போயிருக்கும் போக்கைப் பார். சீ! நீயும் ஒரு வனதேவதையா? உனக்கு அவ்வுரிமை யார் கொடுத்தது. பிடி சாபம், நீ குருட்டு விழியும், ஒடிந்த இறகும், புழுத்த உடலும் உடைய கிழக் குயிலாக மாறிப் போ' என்று மதனன் கர்ஜித்தான்.

மறுகணம் கிழவி குயிலாக மாறிப் போய் கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்தாள். மன்மதன் மனம் இளகவில்லை.

அவன் குயிற் குஞ்சுகளைத் தன் மந்திரக்கோலால் தட்டி 'கண்ணும், சிறகும், உடலும் அழிந்தும் காத வழியாத சின்னக் குழந்தைகளே. நீங்கள் இருவரும் எல்லையில்லாத பேரழகுடைய வனதேவதைகளாய் மாறி, இவ்வனத்தை ராஜாவும் ராணியுமாய் ஆண்டு வருவீராக' என்று வரம் கொடுத்தான்.

ஆ! என்ன ஆச்சரியம்! குயிலனும், குயிலியும் அங்கில்லை. அதற்குப் பதில் மின்னலைக் குழைத்துச் செய்தது போன்ற, வான் சிறகுகள் பூண்ட ஒரு இளங்குமரனும், இளங்குமரியும் மன்மதனைத் தொழுகின்றனர்கள்.

'ஐயனே! ஏதோ! தெரியாத்தனத்தால் கொள்ளிக் கண்ணி எங்களுக்கிழைத்த துன்பங்களை மறந்து அவளுக்குப் பழைய உருவைக் கொடுத்தருளல் வேண்டும், என்று வனதேவதைகளான புதுக் காதலர்கள் மன்றாடினர்.

மதனனும் மனமிளகினன். எனினும் கொள்ளிக்கண்ணி அவள் மகள் வீட்டை விட்டு வெளி வரலாகாது என்று உத்தரவிட்டான்.................. மன்மதன் மறைந்தான்.

* * *

வனத்தில் ஒளி புகுந்தது, மலர்கள் மலர்ந்தன, பறவைகள் பாடின. குளத்தில் பனிக்கட்டி உருகியது. வனதேவதைகள் தங்கள் ராஜனையும், ராணியையும் சுற்றிக் கூத்தாடினர்.

காத லென்பதோர் மையம்—இந்தக்
காசினி வட்டச் சுழலதற் கச்சு
காதலிற் தோன்றுது வாழ்க்கை—
இன்பப்
காதலழிவு மரணத்தின் சேர்க்கை
என்று கிளி கவி செய்தது.

வாங்கத் தவறுதீர்கள்!

வாசிக்க வேண்டிய புத்தகங்கள்!!

ஸ்ரீமான் ஆக்கூர் அனந்தாச்சாரியார் எழுதிய

சங்கீத வித்வான் **கிட்டப்பா சரிதம்**

விலை அணா 2.

டால்ஸ்டாய் அல்லது **மகாத்மா காந்தியின் குரு**

விலை அணா 3.

தபால் கூலி வேறு.

வியாபாரிகளுக்கு ஏராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

கந்தன் பிரஸ்,

32, பிராட்வே, சென்னை.

ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின்

காதல் முதலிய கதைகள்

(தபாற்கூலி யுள்பட 10 அணா ஸ்டாம்பு)

சுதந்திரச் சங்கு காரியாலயம்,

சொன்னால் விரோதம்

("திலீபன்" எழுதியது)

சொல்லுவதற்கா செய்திகள் இல்லை? ...னையோ இருக்கின்றன. ஆனால், ...லல முடியவில்லை. புதிதாக வியா... எழுத உட்காருகிறவர்கள்தான் ...ன எழுதுவது, என்ன சொல்லு... என்று தவிக்கிறார்கள். அதைவிட ...ர்கள் எதை எழுதாதிருப்பது ...ன்று சங்கடப்படுகிறார்கள் என்ப...கக் கூடச் சொல்லலாம். சில சம... கஷ்டம் அப்படி நேர்ந்து விடு...து. எழுதுவதற்கும் சொல்லுவதற்... எத்தனையோ விஷயங்கள் இருக்...றன. ஒவ்வொருவர் மனத்திலும் ...வளவோ சங்கதிகள் குமுறிக் ...ண்டு கிடக்கின்றன. அவற்றிற்...ல்லாம் மாத்திரம் எழுத்து மூல...ன ரூபம் கொடுத்து வெளியே ...ப்ப முடியுமானால், என்ன அற்புத...ளவுகள் நேரிடும் தெரியுமா? அதை ...ச் சொல்லமுடியும்!

* * *

இந்தியா—நமது புராதனமான புண்...ப பூமிதான்—இப்போது அடைந்தி...ருக்கும் நிலைமையை நினைத்தால், சிறிது ...து தியானம் செய்தால் போதுமே, ...ிச்சுப் பளிச்சென்று எவ்வளவோ ...னல் எண்ணங்கள் தோன்றும். ... நினைப்பதுதான் கிடையாது. ஒரு ...டியைப் போய்க் கேளுங்கள். கதை ...ல் என்றால், உள்ளத்திலே பெருங் ...ர்ச்சியுடன், "நான் வாழ்ந்த கதை...ச் சொல்லவா, வளர்ந்த கதையைச் ...ல்லவா, வாழ்க்கைப்பட்ட கதை...த்தான் சொல்லவா?" என்று ...ட்டு விடுகிறாள்.

* * *

இந்தியா வாழ்ந்த காலமுண்டு; ...ர்ந்த காலமுண்டு; உலகத்துக் ...ரு புதுமையாக ஜொலித்த காலமு...ண்டு. அந்தக் கதை யெல்லாம் ...தற்கு என்பார்கள். ஒரு தேசம் ...துமை யடைவதில்லை. இந்தியா ...த்திரம் நித்திய யௌவனத்தை ...ந்து விடுமா என்ன? ராமாயண ...லத்தில், பாரத காலத்தில், பகவான் ...த்தன் காலத்தில், அசோகன் காலத்...தில், பின்னும் பலபல சரித்திர புரு...ஷர்கள் காலத்தில் எல்லாம், 'வெள்ளலைக்கைகளைக் கொட்டி முழக்கிய' கடல் மூன்று திசையும் இன்றும் முழங்கிக் கொண்டுதா னிருக்கின்றது. வானளாவிய சிகரத்தையுடைய இமயமலையும் இன்னும் இருந்து கொண்டுதா னிருக்கின்றது. தென்கோடியில் 'நித்தம் தவம் செய்குமரி'யே இன்றும் எல்லையாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தியாவின் இயற்கை வளம் மாறவில்லை. மனிதன் மாத்திரம்தான் தலை கீழாக மாறிவிட்டான்.

* * *

இன்றைய இந்து சமுதாய வாழ்க்கையைப்பற்றி என்ன சொல்லுவது? என்ன சரித்திரம் எழுதுவது? பஞ்சை மனிதர்களுக்குச் சரித்திரம் வேறேயா என்று, ஒரு சரித்திரக்காரன் கேட்டால், வாய்மூடி மௌனியாய்க் கிடக்க வேண்டியதுதான். பாட்டு, கூத்து. கேளிக்கை, நாடகம்—இவற்றைப்பற்றி யெல்லாம் சிந்திக்கலாமா? 'புல்லினில் வைரப்படை' தோன்றச் செய்யவேண்டும். அதற்குப் பாட்டு உண்டா? கூத்து உண்டா? கேளிக்கை உண்டா? அந்தப் பாட்டு முதலியவற்றை இரண்டு கையும் கூப்பி வரவேற்போம். செத்த பிணத்தைச் சுடுகாடு சேர்ப்பது போன்ற கேளிக்கைகள் நமக்கு வேண்டாம். இதை வெளிப்படச் சொன்னால், சீறி விழுவார்கள்; கலைகளுக்கு விரோதி என்று பட்டம் கட்டி விடுவார்கள்.

* * *

கலைகளுக்கு மனிதனா, மனிதனுக்குக் கலைகளா? சுவருக்குச் சித்திரமா, சித்திரத்துக்குச் சுவரா? உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் இடத்தில் சரச லீலைகள் நடத்துவது போலத்தான் சீரழிந்த சமுதாயத்தில் கலைக்காகவே கலையென்று சொல்லுவதும். "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கை கொட்டிச் சிரியாரோ?" என்றார் நமது கவி திலகர். கவலையற்ற வாழ்வு வாழும் மனிதர் சிரித்து விளையாடிச் சொகுசாய்க் காலம் கழிக்கலாம்; கழிக்க வேண்டிய தேவையும் ஏற்படலாம். உடைபட்டுச் சிதைந்து கிடக்கும் சமுதாயம் உயிர் பெறுவதற்கு வழி தேடவேண்டும். வண்ணாத்திப் பூச்சிபோல் பறந்து மடிய வழி தேடலாகாது. மனிதன் மனதை அலைந்து திரிந்து அல்லற்படச் செய்யும் கலைகளே நாட்டிலே மிகுத்து விட்டன. அவற்றிற்குச் சிங்கார ரஸம் ததும்புவை என்று நாமம் சூட்டி விடுகிறார்கள். இந்தக் கலைகளைவிட அபினைக் கொடுத்து ஜனங்களைத் தூங்க வைப்பது மேல் என்று ஒரு அறிஞர் சொல்லுகிறார். விசுவாமித்திரர் தவத்தைக் கெடுத்த மேனகை போல, ஜனங்கள் மனங்குவிய முடியாமல், செயலற்று மயங்கிச் சிதையும்படி செய்யும் இந்தக் கலைகளின் ரகசியத்தை வெளியிட்டுச் சொன்னால், சோபாவில் படுத்திருப்பவர்களின் விரோதம் வந்துவிடும்.

* * *

ஒன்றரை வயதில் கொட்டு மேளத்தோடு கலியாணம். மூன்று வயதில் கணவனின் பரலோகப் பிராப்தி; வைதவ்ய சித்தி. இப்படிக் குடும்பத்துக்கு ஒரு பிரதிநிதி. அதற்குப் பிராம்மண சமூகம் என்று பெயர். இந்த அழகைப் பிற சமூகங்கள் வேறு பின்பற்றி விடுகின்றன. இந்த நிலைமையால், நேரிடும் விபரீதங்கள் எத்தனை எத்தனையோ. அவையெல்லாம் மிக ரகசியம். அவற்றையெல்லாம் தீரமாய் வெளியிடலாமா? ரணத்தைக் கீறி ஆற்ற வேண்டும் என்பார்கள். மருந்து கொடுத்தே சொஸ்தப்படுத்தி விட வேண்டும் என்று ஆசைப்படுவோரை என்ன செய்ய முடியும்? 'நல்லதோர் வீணை செய்தே அதை நலங் கெடப் புழுதியில் எறிவதுண்டோ?' அவள் விதவை. அது மனிதர்களின் முடிவு. இயற்கை என்ன செய்கிறது? அவள் விதவையானால், ஏன் வளர்கிறாள்? அவளுக்கு மனம் எதற்கு? உணர்ச்சி எதற்கு? இயற்கை முட்டாள்தனமானது என்று சொல்லலாமா? எப்படி யிருந்தாலென்ன; மனிதன் இயற்கைக்குப் பணிந்துதான் போக வேண்டும். எதிர்ப்பது எதிராறு நீஞ்சுவது போல. நீஞ்சினால் கைதான் சளைக்கும். இதோ கண் முன்னே அந்தக் கதியைத்தான் நாம் அடைந்து விட்டோமே. ஆனாலும், அதைப் பற்றிப் பேச

லாகாது; பொத்திப் பொத்தி வைக்க வேண்டும்!

* * *

மகா கீர்த்திவாய்ந்த நாடகாசிரியன் ஷேக்ஸ்பியர் எழுதினார் ஒரு நாடகம். ஹாம்லெட் என்பது அதன் பெயர். ஹாம்லெட் ஓர் அரச குமாரன். தந்தையைக் கொன்று, தாயைக்கெடுத்து, ராஜ்யத்தை அபகரித்த ஒரு கிராதகன் மீது அவனுக்குச் சந்தேகம். யோசனை, யோசனை, மாளாத யோசனை— ஹாம்லெட் யோசித்துக் கொண்டேயிருக்கிறான். கடைசியில் சோகமான முடிவு. பலபேர் மரணம்; தானுமழிகிறான். நாட்டிலே இந்த மாதிரி ஹாம்லெட்டுகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். மெத்தையிற் படுத்துப் புரளுவோருக்கு இவர்களைப்பற்றித் தெரியாது. சொன்னால் புரளி செய்வார்கள். வாழ்க்கை குலைந்த இந்த வாலிபரின் எண்ணங்கள் என்ன கோரமானவை என்பதை வெளியே சொல்லலாமா? எடுத்துக் காட்டலாமா? வாய்க்காலுக்கு அணைபோட்டு, பெரிய ஆற்றைக் கிளப்பிவிடும் வித்தைபோல, அந்தக் கோர எண்ணங்களை அடைத்து வைத்திருக்கிறோம். அவற்றைப் பற்றிப் பேசக்கூட நமக்குப் பயமாயிருக்கிறது. சாஸ்திரம், சமூகம், சட்டமெல்லாம் சரமாரியாக நம்மேல் பாய்ந்துவிடும்.

* * *

வேண்டாம். சொன்னால் விரோதம். நாம் ஏன் அவற்றைக் குறித்தெல்லாம் சொல்லவேண்டும்? தன்னைத் தானே மறக்கும் மறதியென்ற வேதாந்தம் தற்கொலைக்குச் சமானம். என்றாலும், அந்த வேதாந்தத்தில் மூழ்கித் தப்பித்துக்கொள்ளவே நாம் எல்லாரும் ஆசைப்படுகிறோம். ஆனால், நாம் பகலையும் இரவையும் மறந்தால், சூரியன் உதிப்பதையும் அஸ்தமிப்பதையும் நிறுத்திவிடுவானா? குளிர்வதும் சுடுவதும் நின்றுவிடுமா? இருளும் ஒளியும் அகன்றுவிடுமா?

* * *

கிறிஸ்து பெருமான் ஒரு உதாரணம் சொன்னார். மணவாளன் வரும் நேரம் தெரியாதிருந்த ஒரு கோஷ்டி கன்னிப் பெண்கள் உறங்கி விழுந்து கொண்டிருந்தார்கள். இன்னொரு கோஷ்டிக்கும் அவர் வரும் நேரம் தெரியாது. என்றாலும், அவர்கள் தீபங்களுடன் சதா விழித்துக்கொண்டிருந்தார்கள். மணவாளன் வந்து போய்விட்டார். விழித்திருந்தவருக்குப் பாக்கியம். உறங்கினவருக்கு உறக்கமே மிச்சம். ஒரு புதிய மாறுதல் இந்தியாவுக்கு உண்டாகப் போவது என்னவோ நிச்சயம். எப்பொழுதென்று சொல்ல முடியாதுதான். இப்போது உறங்குபவர் அப்போது நடமாடிக் கொண்டிருக்கும் வெற்றுடம்பாயிருப்பார்கள். அதை மாத்திரம் எச்சரிக்கை செய்யலாமல்லவா?

தி யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் மதராஸ். 1906ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி :—சென்னை அபிஷியல் டிரஸ்டி.

2 கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள். 55 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.

12 லக்ஷத்திற்கும் மேலாகவே வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில :—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.

இது ஜரூராகவும் பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

"யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்"
செம்புதாஸ் தெரு, சென்னை.

M. K. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.



அட (சங்கீத) பாவமே!

(“மாயா” எழுதியது)

சங்கீதம் என்பது எல்லாரும் அனுபவிப்பதற்காக என்று நான் வெகு நாட்களாக, எண்ணிக் கொண்டிருந்தேன். கடவுள் சங்கீதத்தைப் பூலோகத்துக்கு அனுப்பியதன் உண்மையான காரணம் என்ன என்பது இப்போதுதான் சில காலமாக விளங்கிவர ஆரம்பித்திருக்கிறது. சங்கீதம் என்பது,

1. கஷ்டப்பட்டுக் கற்றுக்கொண்டவர்கள் பாடுவதற்கு ;

2. ஒரு பாவமும்—சங்கீத ‘பாவம்’ அல்ல—அறியாத ஜனங்கள் கேட்டு அனுபவிப்பதற்கு ;

3. பாவம், ராகம், நாதம், சுரம், தாளம் என்று ‘ஞானஸ்தர்’கள் வம்பளப்பதற்கு;

4. இந்த வம்புகளை வைத்துக் கொண்டு, சில பத்திரிகைக்காரர்கள் ‘புகை’ விடுவதற்கு.

சுமார் ஏழெட்டு வருஷங்களுக்கு முன் என் போன்றவர்கள் சங்கீதக் கச்சேரிக்குச் சென்றால், சங்கீதம் காதுக்குக் குளிர்ச்சியா யிருக்கிறதா என்று மாத்திரம் கவனிப்பது வழக்கம். இந்த மாதிரி இப்போது கேட்டு விட்டு வெளியே வந்தால், பெரிய தொந்தரவா யிருக்கிறது.

வாசகர்தான் ஒரு கச்சேரிக்குப் போய் வந்தாரென்று வைத்துக்கொள்ளலாம். அவருக்குப் பல நண்பர்கள். நண்பர்களில் ஒருவர் பத்திரிகைக்கு எழுதுபவர். அவருடன் சம்பாஷணை.

“என்ன, (இன்னார்) சங்கீதக் கச்சேரிக்கா போய்விட்டு வருகிறீர் ?”

“ஆமாம்.”

“அவர் பாவம் எப்படி?”

“அவர் பாவமா? அது அவருக்கும், அவரைப் படைத்த ஈசுவரனுக்கும் தான் தெரியும்.”

“வித்வான் மூக்கை அசைத்தாரா ? அதை உமது ‘நோட் புஸ்தகத்’தில் குறித்துக் கொண்டீரா ?”

“கவனிக்கவில்லை.”

“நீர் கச்சேரியில் இருமினீரா, தும்மினீரா, தாளம் போட்டீரா, தலையை அசைத்தீரா ?”

“ஞாபகமில்லை.”

பத்திராசிரிய நண்பருக்குக் கோபம் மூக்குக்குமேல் வர ஆரம்பித்து விடுகிறது. ஏன் ?

வித்வான் கையசைப்பு, உமது தும்மல், அடுத்தவர் போட்ட தாளம், கொட்டகையின் வாசற்படி இவற்றையெல்லாம் சேர்த்து ஒரு நீண்ட—வெகு நீண்ட—சங்கித விமர்சனம் செய்து விடலாமென்று நம்பி வந்த அவரை நீங்கள் இப்படி நட்டாற்றில் விடலாமா ?

இதைப் பற்றி யெல்லாம் நினைக்கும்போது, கடவுள் சங்கீதத்தைப் பூலோகத்திலிருந்து வாபீஸ் வாங்கிக்கொள்ள மாட்டாரா என்று நீர் வருத்தப்படுகிறீர்.

நண்பர் மனஞ்சலிக்க வேண்டியதில்லை. ராகம், பாவம், சுரம், சாஹித்யம், தாளம் என்ற வார்த்தைகளைக் கண்டு மருளவேண்டியது மில்லை. சங்கீதத்தின் முக்கியமான தன்மையை நன்ருக அறிந்துகொண்டால், ‘ஞானஸ்தர்கள்’ பிரயோகிக்கும் இந்த அஸ்திரங்களுக்கெல்லாம் பயப்பட வேண்டியதில்லை.

சங்கீதத்தின் மிக முக்கியமான நோக்கம், காதுக்கு மிக இனிமை பயக்கும் முறையில் நாத வகைகளை இசைபடுத்தி வெளிப் பொழிவதுதான். ஹோட்டலுக்குப் போனால், பாம்பே ஹல்வா என்று சொல்லுகிருர்கள். சட்டியில் தயார் செய்வதற்காகவே அது தயாரிக்கப்படவில்லை. விற்பனை செய்வதற்காகத்தான் தயாரித்தார்கள். சாப்பிடுவோர், அதில் உள்ள சர்க்கரை, நெய், மாவு ஆகியவற்றின் அளவு என்ன என்று ஹோட்டல் நிர்வாகியிடம் விசாரணை செய்வதில்லை. வாய்க்கு ருசியா யிருந்தால், எல்லாம் சரியான அளவுதான் என்பதில் எவ்வித சந்தேகமு மில்லை. அதே போலத்தான் சங்கீதமும். காதுக்குக் குளிர்ச்சியாக இருந்தால், ராகம், தாளம், சுரம் எல்லாம் சரியா தவறு என்று யோசிக்க வேண்டியதே யில்லை ; நிச்சயம் அவை சரியாய்த்தான் இருக்கும். சங்கீதப் புத்தகத்திலோ, விமர்சனத்திலோ சொல்லப்பட்டபடி யில்லாவிட்டாலும், சங்கீதம் சங்கீதந்தான். சங்கீதம், காதைக் குளிர்விப்பது,

‘பாவம்’ என்ற ஒரு வார்த்தை இப்போது தமிழ் சங்கீத விமர்சகர்களின் கையில் அகப்பட்டுக்கொண்டு மிகவும் தத்தளிக்கிறது. இந்த ‘பாவம்’ என்பது பதி, பசு, பாசம் என்ற வேதாந்த வார்த்தைகளைப் போல் தகரார் செய்கிறது.

“அதோ அந்த சங்கீத வித்வானுக்குப் பாவம் கிடையாது” என்று ஒருவர் சொல்லுகிருர்.

“இல்லை; அவரிடம் மூட்டை மூட்டையாக ‘பாவம்’ இருக்கிறது” என்று இன்னொருவர் வாதிடுகிருர்.

‘பாவம்’ என்பதை எந்தத் துலாக்கோலாலும் அளக்கமுடியாது. கேட்பவரின் காதும் ஹிருதயமும்தான் சங்கீத ‘பாவத்’தை நிர்ணயிப்பவை. செவிடன், கல் மனம் படைதத்வன், வேண்டுமென்றே கோமாளி வேஷம் போட்டவன் ஆகியவரிடம் சங்கீத ‘பாவ’த்தின் பாச்சாக் கொஞ்சம்கூடப் பலிக்காது.

பாட்டின் வாசகத்தில் ‘பாவ’முண்டு; தனி நாதத்தில் ‘பாவ’முண்டு ; இரண்டும் இசையுடன் இணைவதிலே ‘பாவ’ முண்டு.

“எந்தையும் தாயும் குலவி மகிழ்ந்து இருந்ததும் இந்நாடே” என்ற பாரதி பாட்டை அநேகமாக யார் பாடினாலும் உள்ளத்திலே ஒரு பரவச உணர்ச்சியை உண்டாக்கி விடும். இதுதான் ‘பாவம்’ என்பது.

நமக்குத் தெரியாத ஒரு ஹிந்துஸ்தான் பாட்டு ; அதை அட்சரம் அட்சாமாய் மனிதர்போல் உச்சரிக்கத் தெரியாத வீணை, பிடில், நாதசுரம் ஆகியவற்றில் வாசிக்கிருர்கள் ; அப்பொழுது மெய் விதிர்க்கும்படி ஒரு உணர்ச்சி உண்டாகி விடுகிறது. இதுவும் ‘பாவ’ந்தான்.

செம்மைபட்ட காதும், பண்பட்ட உள்ளமும் அடையும் உணர்ச்சி அனுபவத்தின் அளவுதான் ‘பாவத்’தை நிர்ணயிப்பதாகும்.

அட ‘பாவம்’ என்ற வார்த்தையே, கொஞ்சம் நீ உனது லீலைகளை நிறுத்திக்கொள்ளேன் ; நாங்கள் சற்றுச் சங்கீதம் அனுபவிக்கிறோமே.

மனோ தர்மத்துக்கு இடங்கொடு ; நீ பரமபதமடைந்து விடமாட்டாய். மனோ தர்மத்தினால், நீ மேலும்மேலும் ஓங்கி வளர்வாய். சங்கீதக் கலையும் அபிவிருத்தி யடையும்.

ராமனாதனின் கடிதம்

(புதுமைப் பித்தன்)

யாருக்கு எழுத..........எல்லாருக்கும்தான்..........நாளைக்கு இந்நேரம், ..."சற்றுப் புத்தி சுவாதீனமில்லாத பொழுது பிராணத்தியாகம் செய்து கொண்டான்", என்ற தீர்ப்புக் கூறியாகிவிடும். 'சற்றுப் புத்தி சுவாதீனமில்லாத பொழுது', அட முட்டாளே! உனக்குத்தான் அப்படி. இந்த இரண்டு கால் ஓநாய் இருக்கிறதே அதற்கு வெறி..........சீச்சி! உன்னைப்பற்றி எனக்கென்ன. நாகரிகம், நாகரிகம், படிப்பு, அந்த இழவுதானே! என்னை என் இஷ்டப்படி செய்துகொள்ள உரிமையில்லையாம்! உன்னைக் கேட்டுக்கொண்டா நான் பிறந்தேன்? நான் துடிதுடித்துக் கொண்டு இருந்தேனே. அப்பொழுது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க உரிமையுண்டுபோல் இருக்கிறது........அட ஒட்டைப் பானை வேதாந்தமே!.........வெட்டுக் கிளி! நீயாகப் பிறந்தாலும், டார், டார் என்று குசாலாகப் பறந்து குதிக்கலாமே! அடடே! விளக்கின் கிட்டப் போகாதே. அது நாகரிகம்! என்னைப் போல் தீய்ந்து போவாய்! இல்லை, இல்லை, நீதான் பட்டதாரி. அந்த விளக்குத்தான் கலாசாலை. விளக்கினால் உள்ளத்தைக் கருக்கமுடியுமா! அதால் உன்னைத் தூக்குப்போட்டுக் கொல்லச் செய்ய முடியுமா! அதற்குள் குதிக்காதே. எழுதி முடியட்டும். எண்ணை இருந்தால்தானே! நாளைக்கு அந்த எண்ணைக்கடைச் செட்டியின் மூஞ்சியைப் பார்க்கவேண்டும். திட்டினானே நாக்கில் நரம்பில்லாமல். பயலுக்கு வேண்டும்! கொஞ்சம் பொறுத்துக் கொள். நானும் அணையவேண்டும்; நீயும் அணையவேண்டும். இரண்டு பேரும் குதித்துக்கொண்டு.........

அம்மா இருந்தாள்! இருந்தால் என்ன? "படிக்க வச்சேன், பாடவச்சேன், பல்லுக்கருவான் பாதிலே போனான்", என்று அழுவா? அப்புறம்? நல்ல காலமாய் முன்னாலேயே, போய்ச் சேர்ந்தாள். பொதுவிலே நல்லவள்தான்.........அப்பா இருக்கிறாரே, படிபடி என்று திட்டித்திட்டி இந்தக் கதிக்குக்கொண்டு வந்தாரே.....

....அன்றைக்குக் 'கிளாசிற்கு' டோக்கர் விட்டுவிட்டு, கோயில் மாமரத்திலே அந்த ராமானுஜம் பயலோடேடா குசாலாய் மரக் குரங்கு விளையாடும்பொழுது. அடிச்சாரே, பாவி, என்ன எங்கள் வீட்டு, உங்கள்வீட்டு அடியா.....அந்தப் பயல் சுத்த மசளை, களிமண் தான், பள்ளிக்கூடத்தில் அவனுக்கு அந்த வாத்தியார் வேட்டை! படிப்பே வராது......படிச்சென்ன பண்ண........இந்தக் கதிதான். கொஞ்சச் செலவா? ரூ. 2000 இருக்கும். என் அதற்கு மேலே. வட்டிக்காவது போட்டால், இந்தக் கதி வருமோ? இந்த மண் குதிரையை நம்பி, கொண்டுவந்து கொட்டப் போகிறான், கொண்டுவந்து கொட்டப் போகிறான், என்று எண்ணிக் கொண்டு எல்லாவற்றையும் விற்றுத் தொலைத்தார். அவர் என்ன செய்வார்? பாவம், பழைய காலத்து மனுஷ்யன். வேலை காய்த்துத் தொங்குகிறது, பறிக்க வேண்டியதுதான் பாக்கி என்று எண்ணிக்கொண் டிருக்கிறார். அவர் பாடு கொஞ்சம் கஷ்டந்தான். என்ன இன்னும் கொஞ்ச நாளில் அவரும் சாம்பல் தானே. நான் பட்டதையும் கொஞ்சம் தெரிந்துகொண்டு வரட்டுமே. அவர் சாம்பல், நான் மண்........இந்த வயிற்றைத் தானே நாளைக்குக் கீறுவான். அதற்குள் எரிச்சல் எல்லாம் அவிந்து போயிருக்கும். ஓய் டாக்டரே! உமக்குக் கை ஒன்றும் சுட்டுப் போகாது. குசாலாய்க் கீறும்........உம்! விஷம் இருக்கிறதா என்று பார்க்கவாக்கும். இந்த ஒண்ணாந்தரம் மணிக்கயிறு இருக்கிறபோது, விஷம் வேறா? இரட்டை மேளமாட்டமாய்! தபேலா!......ஆமாம் அந்த ராஸ்கல் தான் ராமானுஜம், அமட்சியூர் டிராமாவிலே தபேலா அடிக்கிறதுதான் இப்பொழுது வக்கிலாம்—கண்ட பலன். அந்தப் பயலை நேத்திக்கு 1 ரூ. கேட்டேன். குரங்கு, முகத்தை அப்படியே தூக்கிக் கொண்டுபோய் விட்டது. அந்தக் காலத்திலே கணக்குக்கூட அவனுக்குப் போட்டுத்தொலைச்சிருக்கேன்! முதலில் டிக்கட் வேறே என்னிடம் விற்கவந்தது!........நீயேன் சொல்ல மாட்டாய். உன் கையிலும் நாலு காசு இருந்தால் அப்படித்தான். அட முட்டாளே! உனக்கு வேலை பார்க்கத் திறமில்லாவிட்டால்? ஏறி இறங்கின படிக்கட்டு, காலுக்குத் தெரியும். பட்ட இடி மனதிற்குத் தெரியும். தொழில் செய்ய மூளை இருக்கிறது. வெற்றிலைக் கடையாவது வைக்க, காசு? மூட்டை தூக்க வேண்டும், ஜம்பத்தை எல்லாம் கட்டி வைத்துவிட்டு, டிரில், டிரில் என்று ஈ விறட்டின பலத்திலே—அதற்கு [illegible]தனை டிமிக்கி—எத்தனை சோற்றுப் பொட்டணம் தூக்கமுடியும்! அவன் தான் அந்த மக்காலி உன்னைக் குமாஸ்தாவாகப் பிடித்துவைக்க திட்டம்போட்டானே. பயலை முக்காலியில் கட்டியடிக்க வேண்டும். சீ! கண்ணில் கொசு விழுகிறது. சாகிற கழுதைக்குக் கண்ணில் கொசுவிழுந்தால் மோசமோ! ....பாரதியைப் பட்டினி போட்டுக் கொன்ற பயல்களல்லவா. அவனை மூட்டை தூக்கச் சொல்லக் கூடாது. நைந்துபோனவனைக் கொன்று விடுவது தானே இயற்கை, உங்கள் ஓநாய் வேதாந்தம். அவனுக்குக் கவிதையாவது இருந்தது நீங்கள் இப்பொழுது பாரதியார் என்று பெருமையடித்துக் கொள்ள. எல்லாம் விதி, விதி. என்னைப்போல் எத்தனைபேர். அவர்களின் துயரத்தை நீக்கும் ஆகுதியாக நான் தற்கொலை இல்லை, தற்கொலை செய்டவன் கோழையாம்! நீ செய்து பார். ஒய்யாரமாக நற்காலியில் உட்கார்ந்து கொண்டு பேசுவதைப் பாரேன். அதற்கும் ஒரு பிசாசுத் துணிச்சல் வேண்டும். பட்டாளத்து ஸோல்ஜர் சாகப் போகிறது தெரியாமலா, போகிறான். அது மட்டும் தற்கொலை யல்ல, வீரம்! சமூகத்திற்கு........தியாகம், தியாகம். நன்றாயிருக்கிறது! நானும் அவனைப் போல் எனது கதியிலுள்ள முட்டாள் பூச்சிகளுக்கு அவசரப்படாதே. இதோ அந்த பிவட்டல் ஜாயிண்டில் (pivotal joint) சரியாக வைத்து ஒரு இறுக்கு. ஒரு குதி! ஜேக்கப் ஏணி தெரியுமா? பரீட்சைக்குக் கூட வந்ததே. அது ஒரு மாதிரி. இது நாகரிக நூலேணி. உங்களுக்கு இவ்வளவு போதும். நான் இருக்கிறவரை நீங்கள் தூக்கி நிறுத்தின மண்ணாங்கட்டிக்கு இவ்வளவு நீளம் போதாதா?

இறக்கும் வரை வெறுக்கும்

ராமனாதன்.

ராமதீர்த்த மணிமாலை

[பரமஹம்ஸ ராமதீர்த்த ஸ்வாமிகள் பாரத தேசத்து ஞானக் களஞ்சியத்தைப் பூரணமாய் ஸ்வானுபவம் செய்த ஒன்றிரண்டு பேர்களில் மிகவும் உன்னதமான ஸ்தானத்தை வகிக்கிறார். துளசிதாசர் வம்சத்தில் மிகமிக ஏழ்மைத்தனத்திலே பிறந்து, இருபது வயதுக்குள் எம்.ஏ., பாஸ் செய்து, சந்யாசியாகி, தொட்ட தொட்ட மக்களை யெல்லாம் கடவுள் மக்களாய்ச் செய்து, 32-வது இள வயதில் காலமானார். அவரது நூல்களைப் பற்றி ஒரு அமெரிக்கர், 'ஒவ்வொருவரும் விலைக்கு வாங்கியோ, இரவலாய்ப் பெற்றோ, கெஞ்சியோ, இல்லையேல் திருடியாவது ராமதீர்த்தர் நூல்களைப் படிக்கவேண்டும்' என்று கூறுகிறார். அவரது நோட் புஸ்தகக் குறிப்புகளில் சிலவற்றைக் கீழே தருகிறோம். —காளிதாசன்]

அண்டங்களுக் கப்பால் சுடர்விடும் அக்னியே! அழிவில்லாத அமிர்த தாரையே! ஆக்கியும் அழித்தும் தனக்கு மட்டும் ஆக்கமும் அழிவும் இல்லாத அற்புதமே! உன்னோடு சேர்ந்து சிரித்துச் சிரித்துக் களிக்க வேண்டும், அப்போது உலகங்கள் யாவும் குலுங்கும்.

* * *

கணக்கற்ற காட்சிகளின் விழிகள் திறக்கின்றன. ஒவ்வொரு விழியூடும் ஒவ்வொரு புது உலகம் தோன்றுகிறது.

* * *

ஒரு பெரிய ஆச்சர்யம். ஒருவன் சொத்தை ஒருவன் கொள்ளையிட நினைக்கிறான்; ஆனால் இனமாக அழியாத ஆனந்த பொக்கிஷத்தைக் கொடுக்கும் மகான்களை மனிதன் கொன்றே விடுகிறான்.

* * *

பளிங்குபோல் நீ மாசு மறுவற்றுப் பரிசுத்தமாய் விட்டால் ஒளிகளுக்கெல்லாம் ஒளி உன் மூலம் பிரகாசிக்கும்.

* * *

மண், வானம், காற்று—இவைகளுள் ஏதாவது ஒன்றேனும் உனக்குச் சொந்தமாயிருக்கிறதா? கடலலைகள் உன் வார்த்தைக்குக் கட்டுப்படுமோ? அவ்வளவு தூரம் போவானேன். உன்னுடைய உடம்பு உனக்குச் சொந்தமானதா?

* * *

சொத்து என்றால் என்ன தெரியுமா? ஒருவனது தன்மையும், குணங்குறிகளும். வீடும், மாடும், பணமும், வயலும் உன்னுடைய சொத்தல்ல. கடவுள் தன்மைதான் உன் சொத்து, சுகம், சுதந்திரம் எல்லாம்.

* * *

கப்பலில் பிரயாணம் செய்யும் ஒருவன் தன்னுடைய பண மூட்டையை இடுப்புக் கச்சையில் கட்டிவைத்தான் —அது தன்னுடைய சொத்து என்பது அவன் எண்ணம். ஆனால் கப்பல் மூழ்க ஆரம்பித்தது. இம்மனிதனுக்கு உண்மை தெரிந்தது. பணம் தனக்குச் சொந்தமல்ல; பணத்திற்குத் தான் சொந்தம், அடிமை என்பதைக் கண்டுகொண்டான். பணம் தனது கனத்தால் கடலின் அடிக்கு அவனை இழுத்தது.

* * *

ஜான்புல் அண்ணாவின் கொள்கை.

'எனக்கு உன்னுடைய தேசத்தைக் (உலகத்தைக்) கொடு,

'உனக்கு நான் பைபிள் (வேதம், அதாவது அடுத்த உலகத்தை) கொடுக்கிறேன்.'

இந்த வியாபாரம் எப்படி, இது திருட்டாகுமா?

* * *

வைதிகன் பழமையைச் சுற்றிச் சுற்றி வளைய வருகிறான். இருபதாம் நூற்றாண்டு வாலிபனோ குருட்டுத்தனமாகப் புதுமையை மட்டுமே கட்டிக்கொண்டு அழுகிறான்.

* * *

தேச நலத்திற்காகத் தன் உயிரை அர்ப்பணம் செய்பவன் க்ஷத்திரியன். தன்னை மறந்து பிறருக்காக வாழ்பவனே பிராம்மணன். ஒவ்வொருவனும் தன்னலத்தைத் தீயிற் போட்டுப் பொசுக்கிய பிறகுதான் மதிப்புக்கு அருகனாகிறான்.

* * *

பூரணத்தை ஒவ்வொருவனிலும், ஒவ்வொருவனையும் பூரணத்திலும் காண்பதுதான் ஞானம்.

* * *

சைவன் சிவனையும், வைஷ்ணவன் விஷ்ணுவையும், கிறிஸ்தவன் கிறிஸ்துவையும், மகம்மதியன் மகம்மதையும் வணங்குவதுபோல், நான் பிராம்மணன், பறையன், மகம்மதியன், ஆர்ய சமாஜி, பிரம்ம சமாஜி, சீக்கியன் என்னும் ஒவ்வொருவனிடமும் இருந்திய மாதாவை வணங்குகிறேன். விரும்புபவனிடமும் சரி, வெறுப்பவனிடமும் சரி அவள் இருக்கின்றாள்.' சகோதரர்களே! நம்முடைய ஹிருதயங்களை ஒன்றாகப் பிணைப்போம், மூளைகளும், கைகளும் தாமாகப் பிணைந்து கொள்ளும்.

* * *

மற்ற தேசங்களைப் போலவே இத் தேசத்திலும் ஆயிரம் நல்லோர்கள் தலைகளாவது, உண்மையைச் சொன்னதற்காக உருளவேண்டும். அப்போதுதான் இந்தியாவில் பரிபூர்ண ஒற்றுமை ஏற்படும்.

* * *

உலகத்தின் வேதப் புத்தகங்களுள் பகவத் கீதை ஒன்றுதான் தேச விடுதலைக்காகப் போர் புரிவதைப் பற்றிப் போதிக்கிறது.

* * *

ஓ! பிதுர்க்களின் க்ஷேமத்திற்காக யக்ஞம் செய்யும் இந்துக்களே. மகாதேவியாகிய பாரதத் தாயின் க்ஷேமத்திற்காக யக்ஞ அக்னியில் உங்கள் தன்னலத்தைப் போட்டுப் பொசுக்கி விடுங்கள்.

* * *

இந்த ஆபத்தான, நெருக்கடியான சமயத்தில் பிறந்துவிட்டோமே என்று வருந்தாதே. சந்தோஷப்படு. ஏனெனில் இப்போதுதான் நமக்குச் சேவை செய்வதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகமா யிருக்கின்றன.

* * *

பயங்காளிகளே! மேடைப் பிரசங்கிகளே! உங்களில் ஒருவராவது தேசத்திற்காகச் சித்திரவதையிற் சிக்கி உயிர் விட்டால் போதும். அந்தத் தியாகம் தேசத்தை எழுப்பிவிடும் அளவு லட்சக் கணக்கான பிரசங்கங்களை ஆயிரக் கணக்கானவர்கள் சேர்ந்து செய்தாலும் முடியாது.

* * *

கடவுளே மனிதனாக அவதரிக்கவில்லையா? நீயேன் கடவுளாக மாறிவிடக் கூடாது. இம்மாறுதல்தான் பரிபூர்ண ஞானம்.

* * *

வைதிகர்களே! சாஸ்திர உண்மைகளைச் சரியான முறையில் போதியுங்கள், ஜாதிக் கட்டுப்பாடுகளை வேண்டிய அளவு தளர்த்தி விடுங்கள். இல்லையேல் இருபதாம் நூற்றாண்டு உங்களுக்கு லாயக்கில்லை. பிதிர்

லோகத்தில் உங்கள் பிதாமகர்களுடன் போய்ச் சேருங்கள். வந்தனம். போய் வாருங்கள். இங்கிருந்தேன் எழவு கொடுக்கிறீர்கள்?

* * *

ஒருவர்—ராமதீர்த்தரே! தங்களை ஜனங்கள் வெறுக்கிறார்கள். தாங்கள் ஏதேதோ சொல்லுகிறீர்களாம்.

ராமர்—ரொம்ப சந்தோஷம். மாம் பழத்தை ஜனங்கள் விரும்புகிறார்கள். அதனால் அதைச் சாப்பிட்டு விடுகின்றனர். என்னை விரும்பினால், அப்பப்பா, என்னையு மல்லவா விழுங்கி விடுவார்கள். ஜனங்களால் வெறுக்கப்பட்டவனுக்கே போதிய தனிமையும், சவகாசமும், ஞானமும் கிடைக்க வழியுண்டு.

* * *

எங்கோ அபூர்வமாக ஒன்றிரண்டு பெரியவர்கள் தாமுண்டு, தம் சேவையுண்டு என்று மௌனமாய் ஊழியம் செய்கின்றனர். இவர்களைப் பற்றிப் பத்திரிகையில் வெளிவராது. எனினும் இவர்கள்தான் உண்மையான ஊழியர்கள். இத்தகைய தியாகிகளில்லாத தேசம் வேர் அறுந்த மாங்கள் நிறைந்த காட்டை ஒக்கும்.

* * *

நல்லொழுக்கம் கைத்தொழிலை முத்தமிடும் பொழுது இன்பம் என்னும் கனி பழுத்துத் தொங்குகிறது.

* * *

ஆறு வளைந்து வளைந்து போகலாம், ஆனால் தண்ணீரில் வளைவு கிடையாது. கரும்பு கோணிப்போனால் கரும்பின் ரசமும் கூடவா கோணி யிருக்கும்? உடல் குறுகிக் கொள கொளத்துக் கிடக்கலாம். அதனால் உயிரும் அப்படி யிருக்கவேண்டும் என்ற நியதி கிடையாது.

* * *

எதைக் கண்டு பயப்படுகின்றாய்?
கடவுளைக் கண்டா? மூடனே.
மனிதனைக் கண்டா? பயங்காளி.
பஞ்ச பூதங்களைக் கண்டா? அவைகளை வெற்றிக் கொள்.
உன்னையே கண்டா? உன்னை அறிந்துகொள்.
நானே சத்தியம் என்று சொல்லு.

* * *

கேள்வியும் பதிலும்

1. 'ஒருவருக்கும் விளங்காத விடுகதை எது?'
'வாழ்க்கை'.

2. 'விரும்பியதெல்லாம் விரும்பியபடி அடைவதெப்படி?'
'அடைந்துள்ளதோடு திருப்தியாயிருத்தல்.'

3. 'எல்லோரும் தானம் செய்வதும், ஒருவரும் விரும்பாததும் எது?'
'உபதேசம்'.

4. 'வேறுபாட்டில்தான் வாழ்வின் சுவையுள்ளது'. அப்படியானால் அச் சுவையைத் தரும் ஆகாரம் எது?
'ஒற்றுமை, ஒழுங்கு, சமனத் தன்மை.'

5. 'வாழ்க்கை பயனுடையதா?'
'அது வாழ்பவனைப் பொறுத்தது'.

* * *

வேனிற் காலத்தைச் சரியான வகையில் உபயோகித்தவனுக்குக் குளிர் காலம் இன்பமாய்க் கழியும்.

* * *

சூரிய ஜோதிக்கு முதுகு காட்டினால், நீ நிழலைத் தொடர்ந்து போகிறாய். ஒரு முறை அந்த ஜோதியின் பக்கம் முகத்தைத் திருப்பு, உன்னை நிழல் தொடர்கிறது. உண்மையை நோக்கிச் செல்பவனைப் பொய் தொடரும். பொய்யை நோக்கிச் செல்பவனை உண்மை தொடராது.

கதரைக் கட்டுங்கள்

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1932ம் வருஷ முடிவில் அமுலிலிருந்த பாலிஸிகளின் மொத்தத் தொகை ரூ.8,13,60,271
மொத்த ஐவேஜிகள் .... ரூ. 1,90,00,000-க்கு மேல்
செலுத்தப்பட்ட உரிமைகள் .... ரூ. 1,00,00,000-க்கு மேல்

பத்திரமும், திடமும் வாய்ந்த பாலிஸிகள்

விசேஷப் பத்திரத் தன்மை பெற்ற பலவகையான பாலிஸிகள்; மிகக் குறைந்த பிரீமிய விகிதங்கள்.
ஸ்திரீகளின் ஆயுட்களும் இன்ஷ்யூர் செய்யப்படுகின்றன.
கூட்டு லைப் பாலிஸிகள் வெளியிடப்படுகின்றன.
கெடுத் தவறுவதற்கு சாசுவதப் பாதுகாப்பளிக்கப்படுகிறது.
வசீகரம் வாய்ந்த வசதிகள்.

இக்கம்பெனிக்கு வேலை செய்வது ஏஜண்டுகளுக்குச் சுலபமானது; அவர்களுக்கு அதிக ஊதியமும் கிடைக்கின்றது.

பூரா விவரங்களுக்கும் தயவு செய்து கீழ்க்கண்டவர்களுக் கெழுதவும்.

நெருப்பு அண்டு மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு, கீழ்க் கண்டவர்களைக் கன்ஸல்ட் செய்யுங்கள்.

நாஷனல் பயர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி,
பிராஞ்சுக் காரியதரிசி,
"நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்."
362, சைனா பஜார் ரோட்,
எஸ்பிளனேட், மதராஸ்.

ஏ. வி. தியாகராஜா,
ஆர்கனைசிங் செக்ரடரி,
171, புதுத் தெரு,
மதுரை.

பூதக்கண்ணாடியில்

மௌனமே முடிவு

பூனை யிருக்குமிடத்தில்தான் எலி பேரன் பேத்தி எடுக்கவேண்டும். இந்தத் தத்துவத்தை அனுஷ்டித்தது கல்கத்தா ஆங்கிலோ-இந்தியன் பத்திரிகையான "ஸ்டேட்ஸ் மேன்." எந்தப் பத்திரிகையும் ஒரு விஷயத்தில் பின் வாங்குவதில்லை. "இந்த உலகத்திலேயே எங்கள் பத்திரிகைதான் ஏராளமாய்ச் செலவழிகிறது" என்று கொஞ்சம் கூடத் தயக்கமில்லாமல் சொல்லுவது வழக்கம். "ஸ்டேட்ஸ் மென்" பத்திரிகை முதல் பக்கத்தில் கொட்டையெழுத்தில் இந்த மாதிரி பெருமையடித்துக் கொண்டது. உடனே "ஆனந்த பஜார் பத்திரிகை" தனக்கே ஏராளமான வாசகர் இருப்பதாகப் பறை சாற்றிற்று. "ஸ்டேட்ஸ் மென்" சும்மா விடுமா? சர்க்கார் அத்தாட்சி பெற்ற ஆடிட்டர் 'ஸர்ட்டிபிகேட்'டை வெளியிட்டது. "ஓ! அதெல்லாம் ஏமாற்று. 'ஸ்டேட்ஸ்மென்' கொடுத்திருக்கும் கணக்கில், கல்கத்தாப் பத்திரிகை, டில்லிப் பத்திரிகை இந்த இரண்டின் கணக்கும் சேர்ந்திருக்கிறது" என்றது 'ஆனந்த பஜார்.' இதற்கு 'ஸ்டேட்ஸ்மென்' பதில் என்ன? 'மௌனம் ஸர்வார்த்த சாதகம்' என்ற பழமொழியை உறுதியுடன் பின்பற்றி விட்டது.

அவள் கோடுக்கவேண்டும்

ஜீவனாம்சம் என்பது ஆண்கள் பெண்களுக்குக் கொடுக்க்வேண்டும் என்பது இதுவரையில் உலகில் இருந்துவந்த ஐதீகம். அமெரிக்காவைச் சேர்ந்த லாஸ் ஏஞ்சல் என்னுமிடத்தில் நீல் என்ற மனிதர் காரலின் என்ற பெண்மணிமீது 3500 டாலருக்கு வழக்குப் போட்டிருக்கிறார். மாஜி மனைவி காரலின் தமக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்பதுதான் நீல் என்பவரது தாவா. கலியாணமோ பரஸ்பரம் செய்துகொள்ளும் ஒப்பந்தம். ஆணைப் போலவே பெண்களுக்கும் சமத்துவ உரிமை வேண்டும். விவாக விலக்கு எந்த நிமிஷத்திலும் செய்து கொள்ளலாம். ஆண்பெண் தொடர்பு என்பது 'ரஸ்தாக் காண்டிராக்ட்' மாதிரி யாகிவிடும் நாகரிகத்தில் இந்த மாதிரி எதிர் பாராத சம்பவங்கள் நடப்பது சர்வ சகஜந்தானே.

கண்ணாடி வீட்டிலிருந்து

கண்ணாடி வீட்டுக்குள்ளிருப்பவன் வெளியே இருப்பவர்மீது கல்லைவிட்டெறியக்கூடாது. அதே கல்லை வெளியிலிருப்பவன் திருப்பி எறிந்தானானால், நேரிடக்கூடிய கோலாகலத்தை நன்றாய் நினைவில் வைத்துக்கொண்டு, சேஷ்டை யில்லா திருக்கவேண்டும். ஸ்ரீமான் மோடிக்கு இந்த விஷயம் தெரிய வில்லை. "நானும் லீஸ் அவர்களும் சேர்ந்து செய்த ஒப்பந்தத்தை ஒரு விதவைகள் சங்கம் கண்டிக்கிறது. இதென்ன ஞாயம்?" என்று குமுறுகிறார் மோடி. பஞ்சாலை வியாபாரிகள் இந்தியச் சீர்திருத்த சம்பந்தமான வெள்ளை அறிக்கையைப் பற்றிப் பேரம் செய்ய என்ன உரிமை என்ற கேள்விக்கு மோடியின் பதில் என்ன? இதனால், பஞ்சாலை முதலாளிகள் சங்கமும் விதவைகள் சங்கமும் ஒன்றென்று நாம் சொல்லவில்லை. விதவைகள் சங்கத்தின் கோபத்துக்கு நாம் பாத்திரமாக விரும்பவில்லை என்றோ, பஞ்சாலை வியாபாரிகளை உயர்த்திக் கூற விரும்பவில்லை என்றோ எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் செய்துகொள்ளுங்கள். மோடியின் வீடு கண்ணாடி வீடு என்பது நமது கருத்து; அவ்வளவுதான் நாம் குறிப்பிட வந்த விஷயம்.

வருகிறாரே, அவர்

சில மாத காலத்தில் சென்னை கவர்னர் ஸ்டான்லீப் பிரபுவின் உத்தியோக காலம் முடிவடைகிறது. இப்பொழுது ஸர் முகம்மது உஸ்மான் அந்த ஸ்தானத்தை 'ஆக்டிங்'காக வகித்துவருகிறார். என்றாலும், இது ஸ்டான்லீயின் உத்தியோக காலம் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்தக் காலம் சமாப்தியானவுடனே, இந்த பாரத்தை வகிக்க எர்ஸ்கின் பிரபு என்பவர் மன்னர்பிரானால் நியமிக்கப்பட்டு விட்டாராம். ஒருவர் கவர்னராக நியமிக்கப் பட்டவுடனே பத்திரிகை நிருபர்கள் அவரைப் பற்றிய ருசிகரமான விவரங்களைத் தெரிவிக்கவேண்டாமா? இந்த எர்ஸ்கின் பிரபு 50 வயதுக்குட்பட்ட இளைஞர் என்ற சமாசாரத்தைத் தவிர, வேறொன்றும் நன்றாய்த் தெரியவில்லை. ஏதாவது இந்திய அனுபவம் உடையவரா என்பது தெரிந்தால் நன்றாயிருக்கும். அதை யார் தெரிவிப்பது? அதில் யாருக்கு அக்கரை?

எழுத்தில் உள்ள சூட்சுமம்

இருந்தாலும் இருக்கும். இல்லையென்று நாம் எப்படிச் சொல்லமுடியும்? பிரிட்டிஷ் ராஜீய நிபுணர்கள் ஏதாவது உள்ளர்த்தம் வைத்து, அறிக்கைகள், உத்திரவுகள் முதலியவற்றைப் பிறப்பிப்பதில் கை தேர்ந்தவர்கள் அல்லவா? வைசிராய் வில்லிங்டன் ரஜா எடுத்துக் கொண்டிருக்கிறாரல்லவா? அவருக்குப் பதில் ஆக்டிங்காக நியமிக்கப்பட்ட ஸ்டான்லீப் பிரபுவின் நியமன உத்திரவில் ஒரு வாசகம் காணப்படுகிறது. "வில்லிங்டன் திரும்புகிற வரையிலோ, அவருக்குப் பதிலாக வேறொருவர் நியமிக்கப்படுகிறவரையிலோ, ஸ்டான்லீ வைசிராய் பதவி வகிக்க வேண்டும்" என்பதுதான் அந்த வாசகம். இந்த மாதிரி சந்தேகமான வாசகங்கள் இதற்குமுந்திய உத்திரவுகளில் இருந்ததில்லையாம். இந்த உத்திரவைப் பார்த்தால், வில்லிங்டன் பிரபு திரும்பி வந்தாலும் வருவார், இல்லாவிட்டாலும் இல்லை என்ற சந்தேகம் ஜனிக்கிறது சிலருக்கு. பிரிட்டிஷ் மந்திரி சபையுடன் அபிப்பிராய பேதங்கள் வில்லிங்டனுக்கு ஏற்பட்டிருப்பதுதான் இதற்குக் காரணம் என்று சிலர் ஊகிக்கிறார்கள். வில்லிங்டன் வருவாரா, மாட்டாரா என்பதைப் பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், அவர் திரும்பி வந்து பிறகு ஊருக்குப் போகும்போது புகழ்மாலை பாடலாம் என்று நினைத்து இந்தச் சமயத்தைக் கைவிட்ட 'ராஜ பக்தி'ப் பத்திரிகைகள் மாத்திரம் ஏமாற்ற மடையக்கூடும். அதற்கு யார் என்ன செய்வது? காற்றுள்ள போதே தூற்றிக் கொண்டிருக்க வேண்டாமா?

பஞ்சாங்கமும் காலண்டரும்

நமது கல்யாணக் கடிதாசுகள் முதலியவற்றில் "வைகாசி௴ 2௳க்குச் சரியான 16-2-34௳" என்பது போல எழுதுகிறோமல்லவா? இது தவறு என்று ஒருவர் 'ஹிந்து'ப் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். "வைகாசி௴ 2

அபர ராத்ரத்திற்கு (அதாவது பின்னிரவுக்குச்) சரியான 16-2-1934" என்று எழுதவேண்டுமோம். தமிழ்த் தேதியின் ஒருநாளின் ராத்ரியின் பாதிக்குச் சமம் இங்கிலீஷ் முழுத் தேதியும் என்று அந்த கிருபர் அபிப்பிராயப்படுகிறார் என்று இதனின்றும் முடிவு கட்டவேண்டியதில்லை. திருத்த வாசகம் இன்னும் ஒரு திருத்தத்துக்கு உட்பட்டு விட்டால், சரியாகிவிடக் கூடும். தமிழ்த் தேதி விடியற்காலையிலிருந்து ஆரம்பிக்கிறது; இங்கிலீஷ் காலண்டர் தேதி பாதி ராத்ரியில் ஆரம்பிக்கிறது—இதுதான் அந்த கிருபரின் கட்சி. கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் இதை நண்பர் கண்டு பிடித்திருக்கிறார். தமிழ் இங்கிலீஷ் இரண்டு தேதியையும் போட விரும்புபவர்களெல்லாம் இனிமேல் கொஞ்சம் யோசிக்க வேண்டியதுதான். ராஜீய வாழ்வுதான் மந்தித்துக் கிடககிறது. சமூக வாழ்வைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. பொழுதுதான் போக வேண்டாமா? இந்த மாதிரி ஆராய்ச்சிகளாவது நாட்டில் கொஞ்சம் பிரபலமாய் நடக்கட்டுமே.

நாலா திக்கு

புதிய துறைமுக பேரம்

கொச்சியில் ஒரு துறைமுகம் கட்ட, கொச்சி அரசாங்கம் விரும்புகிறதாம். அது சம்பந்தமாக, கொச்சி, திருவாங்கூர், சென்னை, இந்தியா இந்த நான்கு அரசாங்கங்களுக்குள்ளும் பேரம் நடந்து கொண்டிருக்கிறதாம்.

* * *

காங்கிரஸ் போர்டுக் கூட்டம்

காங்கிரஸ் தேர்தல் போர்டின் பூர்வாங்கக் கூட்டம் ஜூன்மீ 15உ பம்பாயில் நடைபெறத் தீர்மானமாயிருக்கிறது. மகாத்மாஜீ அதற்கு விஜயம் செய்வார்.

* * *

"காத்துக் கவனி"

காங்கிரஸ் சம்பந்தமாக இந்திய சர்க்கார் தனது கொள்கையை மாற்றிக்கொண்டு, சட்டமறுப்புக் கைதிகளை உடனே விடுதலை செய்வதுடன், காங்கிரஸ் சபைகள் சட்டவிரோதமானவை என்ற தடை யுத்தரவுகளையெல்லாம் ரத்துச் செய்ய வேண்டுமென்று நிஷ்பட்சபாதமான யாவரும் சொல்லுகிறார்கள். ஆனால், சர்க்காரோ இதுவரையில் கல்லுப் பிள்ளையார் மாதிரி யிருக்கிறது. "காத்துக் கவனி" என்ற கொள்கையை அனுஷ்டித்துக் கொண் டிருக்கிறதாம். அநேகமாக ஜூன் மாத மத்திக்குள் சர்க்கார் ஒன்றும் செய்யப் போவதில்லையாம்.

* * *

வங்காளமும் ராமனும்

ஸர் ஸி. வி. ராமன் உலகம் போற்றும் சயின்ஸ் நிபுணர். கல்கத்தா சர்வகலாசாலையில் கௌரவப் புரொபஸராக நியமித்திருந்தார்கள். ராமனைப் போன்ற ஒருவரைப் புரொபஸராகப் பெறுவது அந்தச் சர்வ கலாசாலைக்குக் கௌரவமேயன்றி, அவரைப்போன்ற மேதைகளுக்கு இதனால் எவ்வித லாப நஷ்டமும் கிடையாது. இப்பொழுது அவர் அந்தப் பதவியினின்றும் ராஜினாமாச் செய்துவிட்டார். ராஜினாமாவின் காரணம் தெரியவில்லை. இந்திய சயின்ஸ் பண்டிதர்களுக்குள் சில காலமாக ஏதோ விவகாரம் நடந்துகொண்டிருந்தது. வாங்காளத்துக்கு மாகாண பக்தி மிகவும் அதிகம். வங்காளப் பத்திரிகைகளெல்லாம் ராமனைத் தூற்றிக்கொண்டிருந்தன. இந்த ராஜினாமாவுக்கு அதுவே காரணமா யிருக்குமோ என்று சந்தேகம் ஏற்படுகிறது. அப்படி யிருக்குமானால், என்ன சொல்லுவது! சயின்ஸ் அறிஞர்களுக்குள்ளும்கூட இந்த மாதிரி மனஸ்தாபங்களும் பிளவுகளும் ஏற்படுவதை நாட்டின் துர்ப்பாக்கியம் என்று வருந்த வேண்டியதுதான்.

* * *

கடல் கொண்ட பலி

மனத்தை உருக்கும் சம்பவம் அது. ஹைதராபாது வாசியான பாஸவய்யா தமது 30 வயது மனைவியுடன் இரண்டொரு தினங்களுக்குமுன் சென்னைக் கடலில் ஸ்நானம் செய்யச் சென்றார். கரையில் உட்கார்ந்து பாத்திரத்தால் சமுத்திர நீரை முகந்து ஊற்றிக் கொண்டார். பக்கத்தில் சின்னஞ் சிறு கைக் குழந்தையை வைத்துக் கொண்டு நின்றாள் மனைவி. அவள் கண் முன்னே ஒரு பாவி அலை கணவனைச் சுழற்றி யிழுத்தது. எப்படித் தாளுவாள் மனைவி! உதவிக்கு வருவோரைக் காணோம். இடுப்பிலிருந்த குழந்தை யுடனே, அலைகளுடன் போராடிக்கொண்டு, தீரமாய்க் கணவனுக்கு உதவி செய்ய ஓடினாள். கணவன் கைக் கெட்டவில்லை; கையிலிருந்த குழந்தையும் பறிபோய் விட்டது. அந்த வீரப்பெண் மாத்திரம் எப்படியோ தப்பித்துக் கரை சேர்ந்து மூர்ச்சித்துப் போனாள். நீள நெடுகக் கதையைச் சொல்லி என்ன பயன்? அந்தப் பெண்ணின் வீரம் போற்றத் தக்கது. ஆனால், அவளுடைய துக்கமோ தாங்கமுடியாதது. என்ன ஆறுதலை நாம் அவளுக்குச் சொல்ல முடியும்?

* * *

மறுபடியும் திருத்தமா?

ஸ்தல ஸ்தாபனங்களான முனிஸிபாலிடிகள், லோகல் போர்டுகள் முதலியவற்றின் சட்டங்களில் தேர்தல் சம்பந்தமாக மறுபடியும் ஏதோ திருத்தங்கள் செய்ய, சென்னை சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறதாம். மந்திரி கைக்கு அகப்பட்டிருக்கும் அதிகாரங்களில் முக்கியமானது ஸ்தல ஸ்தாபனங்கள் தாம். இவற்றைப் பற்றி ஐந்தாறு மாதத்துக் கொரு தடவை ஏதாவது புரட்சி நடந்து கொண்டே யிருக்கிறது. மூன்று வருஷத்துக் கொரு தடவை தேர்தல் நடத்துவதை நிறுத்திவிட்டு, மூன்றிலொரு அங்கத்தினரை மட்டில் வருஷந்தோறும் தேர்ந்தெடுக்கும் முறையை நுழைக்க, சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறதாம். 'இரும்பு பிடித்தவன் கையும், சிரங்கு பிடித்தவன் கையும் சும்மா யிரா' தல்லவா? அந்த மாதிரி ஏதோ நடந்துகொண் டிருக்கட்டும். மந்திரிகளுக்குத்தான் வேலை வேண்டாமா?

* * *

காங்கிரஸ் காரியாலயம்

அலகபாதிலுள்ள அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் காரியாலயத்தை, சேத் யமுனாலால் பஜாஜ், இரண்டரை வருஷங்களுக்குப் பிறகு மேமீ 25உ திறந்து வைத்தார். . சகல உத்தியோகஸ்தர்களும் முன்போல வேலை செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

சாஸ்திர ஆதாரமுண்டா?

(மகாத்மா காந்தி)

[தன் பெயரை வெளியிட விரும்பாத ஒருவர் 'ஹரிஜன்' பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் காந்தியடிகள் முன்னுக்குப் பின் முரணாய்ப் பேசுவதாய்க் குறை கூறி யிருக்கிறார். முதலாவதாகக் காந்தியடிகள் சமீபத்தில் 'தீண்டாமைக்கு சாஸ்திரங்களில் ஆதாரமில்லை' என்று கூறியதாகவும், அவரை ஆதரிக்கும் மஹாமஹோபாத்யாய ப்ரமத நாத தர்க்க பூஷணம் என்னும் காசிப் பண்டிதர் கூடத் தீக்ஷை பெறாத, பக்தி யில்லாத சண்டாளர் தீண்டாதார்களே என்று கூறுவதால் உண்மையில் அவரை ஆதரிக்கவில்லையெனவும், காந்தியடிகள் சில நாட்களுக்கு முன் ஸநாதனிகள் தீண்டாமைக்குப் பற்பல ஆதாரங்கள் காட்டினாலும் அவை ஒழுக்க முறைக்கு விரோதமாய் இருப்பதால் தாம் ஒப்புக்கொள்ளவில்லை என்று சொல்லி, இப்போதோ தீண்டாமைக்குச் சாஸ்திர ஆதாரம் கிடையவே கிடையாதென்று முரணாய்க் கூறுவதாகவும் குறிப்பிட்டுள்ளர். அதற்கு மகாத்மா விடுத்த பதில்.]

நான் தீண்டாமையைப்பற்றி எப்போது பேசினாலும் இன்றையத்தினம் வழக்கத்திலுள்ள தீண்டாமையைப் பற்றித்தான் பேசுகிறேன் என்பதை யாவரும் அறிவர். நான் ஆயிரக் கணக்கான பிரசங்க மேடைகளில் கூறியதையே திரும்பவும் உறுதியோடு சொல்லுகிறேன். தற்காலத்தில் நடைமுறையிலிருந்து வரும் தீண்டாமைக்குச் சாஸ்திரங்களில் ஆதாரமில்லை.

மஹா மஹோபாத்யாய ப்ரமத நாத தர்க்க பூஷணம் எழுதிய கடிதத்தைப் பற்றி எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. ஒருவன் தீண்டாதானாய்ப் பிறந்து விட்டால் அவன் எப்போதும் தீண்டாதானே என்னும் கொள்கையை மறுத்தே அது எழுதப்பட்டது. பகவத் நாமமாகிய துவாதசாட்சரத்தை ஒருமுறை சொன்னாலே தீண்டாமை போய் விடுகிறது என்பதை ஒப்புக்கொண்டால் பின் தீண்டாதான் தீண்டாமையை விட்டு நீங்க முடியாதென்பதற்கு இடமேது? எனக்கு ஆதாரமாய் நான் சநாதனிகளைக்கூட உதாரணம் காட்ட முடியும்; அவர்களில் ஒருவராவது இதுவரையில் இன்றைய நடைமுறைத் தீண்டாமையை ஆதரித்து ஒரு சுலோகம்கூட ஆதாரம் காட்டவில்லை.

ஜன கணித ரிபோர்ட்டுகளில் பல ஜாதிகளை ஒரு சமயம் தீண்டாதாரில் சேர்த்து விடுவதும், சில சமயங்களில் அவர்களை விலக்கிப் புதுச்சாதிகளை அக்கூட்டத்தில் போட்டுக் கொள்வதும் சகஜமாய் நடந்துவருகிறது. ஜன கணித ரிபோர்ட் நமக்குத் தீண்டாமையின் ஆதாரமல்ல; ஆனல் அந்த ஆதாரத்தின்மேல்தான் இன்று தீண்டாமை நிலைத்திருக்கிறது. இப்போது ஜில்லாவாரியாகத் தீண்டாதாரை நடத்தும் முறைகளுக்குச் சாஸ்திரங்களில் சிறிதும் இடமில்லை. சனாதனிகள் எடுத்துக் காட்டும் சுலோகங்கள் அவர்கள் சொல்லும் அர்த்தத்தை ஒப்புக்கொண்டால் ஹிந்துப் பொது தர்மத்திற்கு அவை விரோதமாய் இருப்பதாய் நான் கூறியதுண்டு. எனவே சாஸ்திரப்படியே அத்தகைய சுலோகங்களை ஆதாரங்களாக ஒப்புக்கொள்ள முடியாது.

ஆகவே இன்றைய நடைமுறைத் தீண்டாமைக்குச் சாஸ்திர ஆதாரமில்லை என்று நான் சொல்லுவதில் முரண்பாடான சமாசாரம் ஒன்றுமில்லை. தேகாரோக்யத்தை முன்னிட்டுச் சில சமயங்களில் தீண்டாமைக்குச் சாஸ்திரம் இடங்கொடுக்கிறது. இது ஒழுக்க முறைக்கோ, அறிவிற்கோ பொருத்தமானது. ஆனல் நான் போராடும் தீண்டாமை பிறப்பிலேயே உண்டாகி, எத்தாலும் நீக்க முடியாதென்று சொல்லும் கொடுமையையே யாகும்.

—ஹரிஜன்.

அக்கறையோடு நூற்றல்

(மகாத்மா காந்தி)

ஒரு ஹரிஜன் பள்ளிக்கூடத்து ஹரிஜன் உபாத்யாயர் தம்முடைய மாணவர்களிடையும், அவர்களது சுற்றத்தார்களிடையிலும் கதர் நூல் நூற்றலைப் பரப்பி வருகிறார். அவர் பல விஷயங்களைப்பற்றி எழுதியுள்ள கடிதத்தின் ஒரு பகுதி:—

"தேசிய வாரத்தில் எப்போதுமில்லாத சுறுசுறுப்போடும், கவனத்தோடும் நூல் நூற்பேன். ஒரு மணிக்கு நான் சராசரி 300 கஜம் நூற்பேன். 40 தோலாப் பஞ்சிலிருந்து 37 தோலா 16-ம் நெம்பர் நூல் எனக்குக் கிடைக்கிறது. பஞ்சைச் சுத்தப்படுத்துவதிலும், அடிப்பதிலும் $2\frac{1}{2}$ தோலாக்கள் போய்விடுகின்றன. நூற்பதில் $\frac{1}{2}$ தோலா குறைந்து விடுகிறது. வீணாய்ப்போன பஞ்செல்லாவற்றையும் நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். இதைத் தலையணைக்கு அடைக்கலாம் என்று நினைக்கிறேன். நூற்பதற்காக வாங்கும் கூலியைக் காட்டிலும் அதிகமாகச் சிலருக்குப் பஞ்சு வீணாவதை நான் பார்த்திருக்கிறேன். நான் ஓய்வு நேரங்களில் மட்டுந்தான் நூல் நூற்கிறேன். என்னுடைய சொந்தமான தேவைக்கு மேல்பட்ட கதரை விற்று, அப்பணத்தால் என் மேற்பார்வையிலுள்ள ஹரிஜனப் பள்ளியை நடத்திவரப் போகிறேன். என்னுடைய நூலை வியாபாரிகள் மற்றவர்களுடையதைக் காட்டிலும் அதிகமாய் விரும்புகிறார்கள். ஏனெனில் அது அத்தனை உறுதியும், நேர்மையும் வாய்ந்தது.'

இந்த நூற்போரை நான் அறிவேன். உண்மையாலும், உழைப்பாலும் இப்

போதுள்ள உன்னத ஸ்தானத்திற்கு உயர்ந்தவர் இவர். சாதாரண நூற்போரைக் காட்டிலும் முதலில் ஒன்றும் பிரமாதமானவராய் இருக்கவில்லை; ஆனால் இப்போதோ வேறு நூற்போர்களில் மிகச் சிலரே இத்தகைய உயர்வைக் காட்ட முடியும். உத்கல் கிராமங்களில் திரிந்துகொண்டு, கிராம ஜனங்களோடு அளவளாவியதில் கதர் நூற்றலின் அளவு கடந்த நன்மைகளெல்லாம் எனக்கு நன்கு விளங்கின. ஏழைக் கிராம ஜனங்களின் சோம்பேறித்தனம் மகா பரிதாபமானது. நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் ஜனங்கள் வீணாக வெறுமே என்னைச் சுற்றிச் சூழ்ந்து கொள்ளுகின்றனர். என்னைச் சூழ்ந்து கொள்பவர்களும் பரம ஏழைகளே. அவர்களது ஆகாரம் மிகவும் எளிமையானது. பால், நெய் இவைகளை அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள். அரிசிச் சோறும், பருப்பும், எண்ணையும்தான் அவர்களது ஆகாரம். அவர்களுக்குப் பெரிய பெரிய ஆசைகளோ, நம்பிக்கைகளோ கிடையாது; இருந்தாலும் அவர்களிடையுள்ள ஒழுக்க நெறியை நாம் காணுதிருக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு ஒய்வு நேரத்தையும் பயன்படுத்தத் தெரியாவிட்டால் அவர்களால் உபயோகமென்ன? ராட்டை ஒன்றுதான் ஒய்வு நேரத்தில் ஏழை மக்களுக்கு உதவி செய்யக்கூடியது என்பது மறுக்கமுடியாத உண்மை. லக்ஷக் கணக்கான மக்களுக்கு வேலை தந்து உதவி செய்யும் எந்தக் கைத்தொழிலும் லாபகரமான கைத்தொழிலே.

—ஹரிஜன்.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு காரியாலயம்

திருவல்லிக்கேணி, சென்னை.

அபூர்வ யோசனை.

'எலி பிடிக்க வீட்டை இடித்த' பிரகஸ்பதியின் கதையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். 'நெல் சாகுபடியில் நஷ்டமா? நெல்லே வேண்டாம்' என்று நமது அரசாங்க விவசாய ஆராய்ச்சி சொல்லுகிறது.

நமது நாட்டின் பொதுவான ஆகாரம் அரிசி; ஆகவே விளைவின் பெரும் பகுதியும் அரிசிதான். 820 லக்ஷம் ஏகர்களில் நெல் விளைகிறது. 320 லக்ஷம் ஏகர்களில்தான் கோதுமை சாகுபடி. இப்போதிருக்கும் மிகத் தாழ்ந்த விலையிலுங்கூட நெல் விற்பனையால் 278 கோடி ரூபாய் கிடைக்கின்றது. கோதுமையால் 48 கோடிகள்தான் வரும்படி. சென்ற மூன்று வருஷங்களில் அரிசி விலை பாதிக்குமேல் குறைந்துவிட்டது. இதனால் விவசாய வரும்படியில் வங்காளத்தில் நூற்றுக்கு 54, பர்மாவில் 71, அஸ்ஸாமில் 70, பீஹாரில் 47, சென்னையில் 44, விகிதம் குறைந்திருக்கிறது. இந்த இழிந்த நிலையை எவ்வாறு மாற்றுவது? நீரும் நானும் என்ன நினைக்கிறோம்? அரிசியின் விலை யுயர்ந்தால் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்றுதானே. இவ்வளவு சுலபமான மருந்தைச் சொல்லிவிட்டால் விவசாய மேதாவிகளின் அபூர்வ ஆராய்ச்சிக்கு மதிப்பேது? ஆகவே, அவர்கள் ஒரு புது வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது குடியானவர்கள் நெல்லுக்குப் பதில் மற்ற விளை பொருள்களைச் சாகுபடி செய்ய வேண்டுமாம். எப்படி!

நம்முடைய தினசரி ஆகாரம் அரிசி. இவ்வாராய்ச்சிக் குறிப்பிலேயே, பர்மாவை நீக்கிவிட்டால் இந்தியாவின் தேவைக்கு வேண்டிய அளவு நெல் இங்கு உற்பத்தியாவதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நம்முன் இருக்கும் முக்கியமான வேலை அயல் நாட்டு அரிசிகள் இந்தியாவுக்குள் வாராமல் பார்த்துக் கொள்ளவேண்டியதுதான். அப்போது நம் நாட்டில் அரிசியின் விலை உயரும் உற்பத்தியும் அதிகமாகும் பர்மாவில் வேண்டுமானால் மற்ற விளை பொருள்களின் சாகுபடியை அதிகமாக்க முயற்சிக்கலாம். மற்றும் நிலவரி விளை பொருள்களின் விலைவாசிக்குத் தகுந்தாற்போல் இருந்தாலொழிய, நமது குடியானவர்கள் ஈடேறுவது கஷ்டம். அரிசி விலையில் மணுவுக்கு 1 அணா அதிகமாயினும் அதனால் நமது தேச வரும்படியில் 6 கோடி ரூபாய் அதிகமாகிறது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். இவ்வளவு சுலபமான வழியை விட்டுவிட்டுத் 'தலையைச் சுற்றி மூக்கைத் தொடவேண்டிய அவசியம் யாது?'

சரி ஐயா! மற்ற விளைச்சல்களில் நமது குடியானவர்கள் கவனம் செலுத்துவதாக வைத்துக்கொள்வோம். அப்போது விளைச்சல் அதிகமாக ஆக விலைவாசிகள் குறைவாகிக் கொண்டே போகுமே. அதற்கு என் செய்வது? அத்துடன் இவ்வதிகப் படியான விளைச்சல்களுக்கு மார்க்கட்டுகள் இருக்கிறதென்பதற்கு உத்தரவாதம் யார் தருவது? கடைசியில், பார்க்க போனால் நமது விவசாய மேதாவிக காட்டும் பாதையில் சென்றோமானா நேராகச் சோற்றுக்குத் தாள போடும் சுக நிலையை அதி சீக்கிரத்தில் அடைந்துவிடலாம். இவ்வறிக்கையின் மேல்தான் விவசாயக் கான்பரன் தனது முடிவுகளைச் செய்யும் என்ற இந்தியக் குடியானவர்களுக்கு இதனா யாதொரு பயனும் இல்லை.

இவ்வளவு வெளிப்படையான, சுல மான விஷயத்தைத் தீர்மானிப்பதற் வருஷக் கணக்கில் ஆராய்ச்சியும், க ஷன்களும், கான்பரன்ஸ்களு தேவை யில்லை. பஞ்சத்தை நீக்க வ தேடுவோர், நீக்க முடியாத அ பஞ்சம் அதிகமாகும் வரை ஆராய் செய்ய முற்பட்டுள்ளனர். என் அழகு!

மகாத்மா காந்தி எழுதிய

ஆரோக்கிய வழி

விலை அணா 4.

சுதந்திரச்சங்கு காரியாலயம்

கதரையே

அணியுங்கள்

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.

இரண்டாம் பாகம் ரூ. 2.

18712

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and e year a discount of 5, 10 & 15% respecti- will be given over these rates.

fice : 8-c, Pycrofts Road,
CANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. **வெளிநாடு ரூ. 6.**

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ.	40	0	0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ.	20	0	0
கால் பக்கத்திற்கு " "	ரூ.	10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ.	1	8.	0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

PARVATHI PARINAYAM

பார்வதி பரிணயம்

இந்நாடகத்தை
"ஷைனிங் ஸ்டார்ஸ் ஸொஸைடியாரால்"
இனிய பாட்டுகளுடன்
"ஹிஸ்மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
ரிகார்டுகளில்
எடுத்திருப்பதைக் கேளுங்கள்.

இதன் விவர புஸ்தகம் எங்கள் அதிகாரம்
பெற்ற எல்லா வியாபாரிகளிடமிருந்தும் இல
வசமாக கிடைக்கும். கிடைக்காவிட்டால் எங்
களுக்கு எழுதினுல் இலவசமாக அனுப்பி
வைப்போம்.

"His Master's Voice"

தி கிராமபோன் கம்பனி லிமிடெட்,
45, ஸௌத் பெரேட், பெங்களூர்.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, T[illegible]iplicane, Madr[illegible]